# கொள்கைப் பிரகடனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு சனாதிபதி

அதிமேதகு

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா

அவர்களால் செய்யப்பட்டது

1995

6633

6633
808.51

OCT 1999

1995, சனவரி 06 ஆந் திகதி இடம்பெற்ற
பாராளுமன்ற அமர்வின்
அங்குரார்ப்பண விழாவின்போது

**அதிமேதகு சனாதிபதி**
**சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா**
**அவர்களால்**

நிகழ்த்தப்பெற்ற

# இலங்கை அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை

**1995 சனவரி 06 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வு அங்குரார்ப்பண விழாவின்போது மேதகு சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்கள் நிகழ்த்திய கொள்கை விளக்க உரை**

மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்களே,

1994 ஆம் ஆண்டானது இலங்கையில் உள்ள நம் அனைவருக்கும் மிகச் சிறப்புவாய்ந்த வருடமாகும். கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள்வரை நிலவிய ஊழல்மிக்கதும் அடக்குமுறைமிக்கதும் அழிவுமிக்கதுமான ஆட்சியின்போது எமது நாட்டு மக்கள் மிகுந்த பெருந்தன்மையோடும் புத்திக்கூர்மையோடும் நடந்து கொண்டுள்ளனர். எமது மக்கள் அடிப்படை மனித உரிமைகள் மிகக் கொடூரமாக அடக்கியொடுக்கப்பட்ட நிலையிலும் அடிவேர்வரை உக்கிப்போன ஊழல் நிறைந்த அரச கட்டமைப்பொன்றின் கீழும் வாழ்ந்தனர். இந்த அரசாங்கம் எமது தேசியச் சொத்துக்களைக் கவலையேதுமின்றி வீணடித்தது. தேசியக் குறிக்கோள்கள் எவையேனும் அற்ற பொருளாதார அபிவிருத்தியெனக் கூறப்பட்ட அபிவிருத்திமுறை அதற்கு இருந்தது. அதன் ஒரேயொரு குறிக்கோள் யாதெனில் அதிகாரபீடத்தில் இருந்தவர்களாலும் அவர்களது சலுகை ஆதரவு பெற்றவர்களாலும் தேசியச் சொத்துக்கள் கொள்ளையடித்துச் சூறையாடுதலேயாகும். அதன்விளைவாக சிறப்புரிமை பெற்ற வெகுசிலர் மேலும் செல்வந்த நிலையை அடையவும் நாட்டிலுள்ள ஏனைய மக்கள் அனைவரும் மிக வறுமைநிலையை அடையவும் நேரிட்டது. சனத்தொகையின் கூடுதலானவர்கள், 1977 ஆம் ஆண்டில் உழைத்த உண்மையான வருமானத்தைவிட மிகக் குறைந்த வருமானத்தைப் பெற நிர்ப்பந்திக்கும் அளவுக்கு அந்த மகா வறுமை அதிகரித்தது.

நாட்டு மக்கள் இடர்மிக்கதும் மிக நீண்டதுமான 17 வருடங்கள் மிகவும் பொறுமையாக இதனைத் தாங்கிக்கொண்டு வாழ்ந்தனர். முன்னைய ஆட்சியின் அரசியல் கொடுங்கோன்மை, ஊழல், ஈவிரக்கமின்மை, வினைத்திறமையின்மை ஆகியவற்றை எதிர்க்கும் மக்களது சுதந்திரமான போராட்டம் பாரியமுறையில் வெடித்து வெளிப்பட்ட மூன்று வரலாற்றுப் பெருமைமிக்க

நிகழ்ச்சிகள் 1994 ஆம் ஆண்டில் இடம்பெற்றன. அந்த மக்கள் இலங்கை அரசியல்துறை சம்பந்தப்பட்ட, சகல இன மக்களாலும் விரும்பப்படும் சாதகமானதும் யதார்த்தமானதுமான மாற்ற மொன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற வேணவாவினையும் மன உறுதியினையும் ஆணித்தரமாக வெளிப்படுத்தினர். சட்டவாட்சி யானது மிக உறுதியாக வேரூன்றுவதன்மூலம் சனநாயகம் சரிவர இயங்கக்கூடியதும் அடக்குமுறை கொடுங்கோன்மையற்றது மான ஒரு நன்மாற்றத்தைப் பொதுமக்கள் விரும்பினர். அந்த மாற்றமானது நிலைநிறுத்தக்கூடியதும் உறுதியானதுமான பொருளாதார அபிவிருத்தியைக்கொணரும் அதே நேரத்தில் உற்பத்தியினையும் தொழில்வாய்ப்புகளையும் அதிகரிக்குமொன் றாகவும் பணவீக்கத்தைக் குறைக்குமொன்றாகவும் சமூக நீதிக்கும் ஒப்புரவுக்கும் வழிகோலுவதன்மூலம் உண்மையான வருமானங்களின் அதிகரிப்பினைக் கொண்டு வருவதாகவும் அமையவேண்டுமென அவர்கள் கருதினர்.

எமது நாட்டின் வடக்கு - கிழக்கில் இடம்பெறுகின்ற யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை ஏற்படுத்து வதற்கான தமது வேணவாவைப்பற்றியும் பொதுமக்கள் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துரைத்தனர்.

18 மாதக் காலப்பகுதியில் நடாத்தப்பட்ட நான்கு முக்கிய தேர்தல்களின் வாயிலாக எமது நாட்டு மக்கள் மேற்கூறிய காரணங்களின்மீது கொண்டிருந்த அசையாத மனத்திண்மை யினையும் உறுதியான ஈடுபாட்டினையும் வெளிக்காட்டியவிதம் பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும். எமது நாட்டின் சமூக அரசியல் அமைப்புகள் அனைத்தையும் ஒளிமழுங்கச் செய்த அரச பயங்கர வாதமும் ஊழலும் நிலவிய இரண்டு தசாப்தங்களின்போது எமது நாட்டு மக்கள் கொண்டிருந்த இந்த மனஉறுதி எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

சனநாயக உலகில் ஈடிணையற்ற முறையில் மிகப் பெரிய வெற்றியை அளிக்கும் வண்ணம் 1994 நவெம்பர் மாதத்தில் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலின்போது பொதுமக்கள் வழங்கிய மாபெரும் ஆதரவினைக்குறித்து எனது அரசாங்கம் மிகுந்த பணிவோடு நன்றி செலுத்த விரும்புகின்றது. பொது மக்கள் எம்மீது கொண்டுள்ள மாபெரும் விசுவாசத்தினையும்

நம்பிக்கையினையும் நாங்கள் நன்றாக உணர்ந்துள்ள அதே நேரத்தில் அந்த நம்பிக்கையின் காரணமாக அவர்கள் உள்ளத்தில் எழுகின்ற பாரிய எதிர்பார்ப்புகளைப்பற்றியும் நன்கு அறிவோம். எம்மீது வைத்துள்ள மிகப்பாரிய பொறுப்பினை நிறைவேற்று வதற்கு எமது அறிவு அனைத்தையும் பயன்படுத்தி மிகுந்த நேர்மையோடும் பற்றுறுதியோடும் வினைத்திறமை யோடும் எனது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. கட்டமைப்பில் உறுதி கொண்டதும் மாறாநிலை கொண்டதுமான கொள்கைகள் பலவற்றை நாங்கள் உருவாக்கியுள்ளோம். இந்தக் கொள்கை களினூடாக செல்லுகின்றதும் அவற்றைப் பொருள்பொதிந்த நிலைக்குக் கொண்டுவருவதுமான முக்கிய விடயமொன்று இருக்கின்றது. அந்த விடயம் யாதெனில் அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையிலுள்ள சமூக உடன்படிக்கையின் விதிகளுக்குக் கேடுவிளைவிக்காத விசுவாசத்தின் அடிப்படையில் அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற தளராத நம்பிக்கையாகும். அரசியலதிகாரமானது பொதுமக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைப் பொறுப்பு என எனது அரசாங்கம் கருதுகின்றது. அந்த அதிகாரமானது நாட்டிலுள்ள மக்கள் அனைவரினதும் நலனை மேம்படுத்தும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்வரை மட்டுமே நியாய மான அதிகாரமாகத் திகழ முடியும். இக்கடமையினை எமது அரசாங்கம் சரிவர ஆற்ற வேண்டுமெனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். எமது மக்கள் எம்மீது வைத்துள்ள விசு வாசத்தை நாங்கள் என்றென்றும் காப்போம்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் நாங்கள் இந்த அரசாங்கத்தின் நிருவாகத்தைக் கையேற்ற பொழுது நாங்கள் வெறுமனே நாட்டை ஆளும் பணியினை மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. அரச பயங்கரவாதம், ஊழல்கள், ஈவிரக்கமற்ற செயல்கள் முதலியவற்றின் காரணமாக உருதிரிபு அடையும் அளவுக்கு அழுக்கடைந்திருந்த அரசியல் முறை யொன்றையும் உள்புறம் வெளிப்புறமாகப் புரட்டப்பட்ட நாடொன்றையும் கையேற்க வேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டது.

ஆளுகை சம்பந்தமான வழமையான பணிகளை நிறைவேற்றும் அதேநேரத்தில் அரசியல் நிறுவனங்களையும் நிருவாக நிறுவனங்களையும் துப்புரவாக்கும் பணியை மேற்கொள்ளவும்

எனது அரசாங்கத்துக்கு நேர்ந்தது. இந்தப் பணி எளிதான காரியம் அன்று. காரணம், அதிகாரவர்க்கத்தைச் சார்ந்த அனைவரும் ஊழல்மிக்கவர்களாகவும் பல்லாண்டுக்கால அரசியல் அச்சுறுத்தல் காரணமாகச் சுயாதீனமாகச் சிந்திக்கவும் நடவடிக்கை எடுக்கவும் முடியாதநிலையில் உள்ளமையாகும். கடந்த 17 ஆண்டுக்காலத்தில் அச்சுறுத்தலின்மூலமும் வன்முறையின் மூலமும் மக்களை ஆளுவதற்கென உருவாக்கப்பட்ட அரசியல் கட்டமைப்புக்களின் விளைவாக மக்களது விருப்பத்தை வெளிப் படுத்துவதன்மூலம் பிரயோகிக்கப்படும் கட்டமைவுகளுக்கும் சீராக்கல்களுக்கும் இடமில்லாமல் போகின்றது. சனாதிபதிக்கு வழுங்கப்பட்டுள்ள மேலோங்கி நிற்கும் அரசியல் யாப்புத் தத்துவங் களைப் பயன்படுத்தி மேலாதிக்கமுள்ள ஆட்சிமுறைக்கு மீண்டும் எளிதில் இட்டுச் செல்லக்கூடிய அபாயம் உண்டு. ஆனால், எமது ஆளுகைப் பணியானது முற்றிலும் வேறுபட்டதாகும்.

சனநாயக முறையிலும் செங்கோன்மையிலும் நாங்கள் கொண்டுள்ள உறுதியான ஈடுபாடானது இந்த நாடு எதிர்நோக்கியுள்ள மிகப் பாரிய பிரச்சினைகளைச் சனநாயக முறையில் தீர்க்கக்கூடிய மனவுறுதியை எமக்கு அளிக்கின்றது. பாராளுமன்றத் தேர்தலில் நாம் வெற்றிபெற்று பதவிக்கு வந்து ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதி தொட்டு 4 1/2 மாதங்களைக் கொண்ட மிகக்குறுகிய காலத்தில் எனது அரசாங்கம் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கென பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### சனநாயக ஆட்சிமுறையினை மீண்டும் நிலைநாட்டுதல்

எனது அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கை யாதெனில் சுதந்திரச் சூழலில் அடிப்படை உரிமைகளைப் பெரிதும் பாதிக்கும் வண்ணம் அப்பட்டமாகவும் மனவருத்தமின்றியும் பிரயோகிக்கப்பட்டு வந்த அவசரகாலத் தத்துவங்களைப் பெருமளவில் தளர்த்தியதாகும். **"சுதந்திரத்துக்கு நாங்கள் கொடுக்கவேண்டிய விலையானது சதா விழிப்புடன் இருப்பதேயாகும்"** என்று புகழ்பூத்த அறிஞரொருவர் கூறியுள்ளார். ஊடுருவ முடியாத புதர்க்காடாக வளர்ந்திருந்த அவசரகால ஒழுங்கு விதிகள் காரணமாக அடிப்படைச் சனநாயகச் சுதந்திரங்களை உறுதிப்படுத்துவதற்கு முடியாதநிலை ஏற்பட்டது. எதிரானதும் இதமற்றதுமான சூழல் ஏற்பட்டிருந்தமையால்

அந்தச் சுதந்திரங்களை நுகரக்கூடிய வாய்ப்பு அறவே இருக்க வில்லை. மிகவும் சிறியதும் மிகவும் ஆதாரமற்றதுமான காரணங் களையிட்டு அடிக்கடி ஆக்கப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகள் பல்கியதன் காரணமாக நாட்டின் வழமையான சட்டங்களில் சேர்க்கப்பட்டிருந்த நலம் விளைவிக்கின்ற முன்காப்பு விதிகள் துச்சமாக புறக்கணிக்கப்பட்டன.

வழமைக்கு மாறான கலவரங்களும் கிளர்ச்சிகளும் ஏற்படும் காலங்களில் அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஆட்சிபுரிவதன் அவசி யத்தை சகல நாடுகளும் ஏற்றுக்கொள்கின்றன. ஆனால், முக்கிய மாகக் கருதவேண்டியது யாதெனில், சனநாயக இலட்சியங்களைப் பாதுகாக்க ஏற்றுக்கொண்டுள்ள எந்தச் சமூகத்திலும் வழமை யான சட்டங்களையும் சட்ட நிறுவனங்களையும் அசட்டை செய்த லானது வழமையான நடைமுறையாக அல்லாமல் எப்பொழுதும் புறநடையான நடைமுறையாகவே அமைதல் வேண்டுமென்ப தேயாகும். ஆனால், எனது அரசாங்கம் பதவிக்கு வந்தபோது துரதிஷ்டவசமாக அவசரகால நிலையின் நேரடித் தாக்கமாக சனநாயக விழுமியங்கள் யாவும் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தன. சுமார் பத்தாண்டுகளுக்கும் மேலாக பாகுபாடற்ற முறையில் நீடிக்கப்பட்டிருந்த அந்த அவசரகால நிலையானது வழமையானதும் அன்றாடம் நிகழ்வதுமான ஒரு தோற்றப்பாடாக நாட்டின் சகல பாகங்களிலும் வாழ்ந்த மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தது. மறுப்புத் தெரிவிப்பதற்கு எமக்கிருந்த ஆற்றல் செயலிழந்திருந்தது. மறுப்பினைத் தெரிவிக்கும் உரிமை இல்லாத காலமாக அது இருந்தது. எமது வெறுப்பினைத் தெரிவிக்கும் புலன்களும் கருவிகளும் செயலிழந்து கிடந்தன. குறைந்தபட்சம் சனநாயகப் பாரம்பரியத்தின் அடிப்படை அமிசங்களையாவது போற்றுகின்ற ஒரு சமுதாயத்தின்மீது இதற்கு மேலான அனர்த்தம் விளைய முடியாது.

பதவிக்கு வந்து 10 தினங்களுக்குள் எனது அரசாங்கம் குடி யரசின் யுத்தம் இடம்பெறுகின்ற பகுதிகளைத் தவிர ஏனைய பிரதேசங்கள் அனைத்திலும் அமுலில் இருந்த அவசரகால நிலையினை வாபஸ் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தது. அந்த நடவடிக்கையின்மூலம் அவசரகால ஆட்சியின்கீழ் சனாதிபதியின் அதிவிசேட சட்டமியற்றுகைத் தத்துவங்களின்மீது நம்பிக்கை வைக்காமல் பாராளுமன்றத்தின் அகப்பாட்டெல்லைக்குள்

செம்மையாக வரவேண்டிய ஏராளமான விடயங்களைக் கையாளுவதற்கு பாராளுமன்றத்திலிருந்த சட்டமுறையான அதிகாரத்தை எனது அரசாங்கம் மீண்டும் நிலைநாட்டியது. அதன்விளைவாக எந்தவொரு தடையும் அச்சமுமின்றிக் கருத்துக்களை வெளிப்படுத்தவும் கலந்துரையாடவும் கூடிய சூழலொன்றை இந்த நாட்டில் எனது அரசாங்கம் ஏற்படுத்தியது.

பத்திரிகையாளர்களையும் உயர்தொழிலர்களையும் தொழிற் சங்கத் தலைவர்களையும் பள்ளி மாணவர்களையும் பல்கலைக் கழக மாணவர்களையும் நடுநிசியில் அவர்தம் வீடுகளிலிருந்து கொண்டு சென்று எரியும் ரயர்களின்மீது அல்லது அவற்றைப் போன்ற கொடூரமான இடங்களில் உயிரற்ற பிணங்களாக எறியப்பட்ட திகிலூட்டிய காலம் மலையேறிவிட்டது.

தமது உற்றார் உறவினர்களை இழந்த பெருவாரியான குடும்பங்கள் படும் கஷ்டத்தையும் வேதனையினையும் எனது அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. அவர்கள் யுத்தத்துக்குச் சென்று மடியவில்லை. ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர். "ஆயுதங்கள் மோதிக்கொள்ளும் போது சட்டங்கள் மௌனம் சாதிக்க முடியாது" என்ற கருத்தில் எனது அரசாங்கம் மிகுந்த விசுவாசம் வைத்துள்ளது. மிகுந்த இடர் சூழ்ந்த காலங்களிலும் அரச செயற்பாடுகள் யாவும் சட்ட முறைமையினதும் பொருத்தமுடைமையினதும் கோட்பாடுகளுக்கு இணங்க அமையவேண்டுமென்ற திடமான வற்புறுத்தல் இல்லாத பொழுது நாகரீகமான சமுதாயத்தின் அத்திவாரங்கள் யாவும், நாகரீக வாழ்வு முழுவதும் சிதைந்துபோவது தவிர்க்க முடியாததாகும்.

எமது நாட்டின் தற்கால வரலாற்றின் பெரிதும் இருள்சூழ்ந்த காலப்பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றியும் காணாமல் போதல்கள் பற்றியுமான உண்மையினை அறியும் பொருட்டு குடியரசின் வெவ்வேறு பிராந்தியங்களுக்கான பொறுப்பு வழங்கப்பட்ட மூன்று விசாரணை ஆணைக்குழுக்களை நியமிக்க வேண்டுமென எனது அரசாங்கம் கருதியது. எந்த ஆளை அல்லது நிறுவனத்தை பழித்துக் கூறுதல் அல்லது நிந்தித்தல் எமது நோக்கம் அல்ல. ஆனால், ஊகத்தின் அடிப்படையில் அல்லது கற்பனையின் அடிப்படையில் நிகழுவதைப்போல் அல்லாமல் ஒரு

நிகழ்வுபற்றிய உறுதியான தகவல் இருக்கும் பொழுது மனவேதனைகளை ஒருவாறு தாங்கிக்கொள்ளக்கூடிய நிலை ஏற்படும் என நாங்கள் கருதுகின்றோம். மரணச் சான்றிதழ் களைப்போன்ற பொருத்தமான ஆவணங்களை வழங்க நட வடிக்கை எடுத்தல் வேண்டும்.

எனது அரசாங்கம் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட காலத்தில் ஆட்கள் பலர் வழமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் வாய்ப்பு இல்லாதவர்களாய் நீண்ட காலமாக கட்டுக்காப்பில் வைக்கப்பட்டு இருந்தனர். இந்த நிகழ்வுகள் எமது நாட்டை உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் உள்ள கருத்தரங்குகளில் பரந்துபட்ட இகழ்ச்சிக்கும் கடுமையான பழிப்புரைக்கும் ஆளாக்கியது. உயர் நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதி யொருவரின் தலைமையின்கீழ் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் விளைவாக நம்பத்தக்க சான்றுகள் இல்லாத ஆட்கள் பலர் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை யாக்கப்பட்டனர். ஏனையோர் விடயத்தில் சட்டநடவடிக்கை விரைவில் எடுப்பதற்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

மேலும், தேர்தல் பிரசார இயக்கங்களின்போது இடம்பெற்ற வன்முறைகளால் ஏற்பட்ட மரணங்கள்பற்றிய பாரதூரமான பிரச்சினையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. பிரதிநிதித்துவ சனநாயக முறையின் உயிர்நாடியான தேர்தல் செயல்முறை யினைச் சீரழிப்பதற்கு இது துணைபுரிந்தது. இந்தத் தேர்தல் பிரசார இயக்கங்களில் இடம் பெற்ற வன்முறைக்கு இரையான வர்களுக்கு நட்டஈடுகளைக் கொடுப்பனவு செய்தல் சம்பந்த மாகப் பொருத்தமான விதப்புரைகளைச் செய்வதற்கு உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியொருவரின் நெறிப்படுத்துகை யின் கீழ் புலனாய்வு செய்வதற்கு எனது அர சாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்தது. இதன் அறிக்கை ஏலவே கிடைத்துள்ள துடன் அதில் செய்யப்பட்டுள்ள சிபாரிசுகளை நடைமுறைப் படுத்துவதற்கு உடன் நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்களே, கடந்த அரசாங் கத்தினால், அது பதவியிலிருந்து 17 வருடங்களில் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகளுக்கு எனது அரசாங்கத்தினால் எடுக் கப்படும் நடவடிக்கைகள் நேர்மாறானவையென இங்கு குறிப்பிட

விரும்புகின்றேன். முன்னைய அரசாங்கம் தேர்தல் வன்முறைகளுக்கு இரையானவர்களுக்கு நட்டஈடு வழங்குதலை அசட்டை செய்ததோடு சனநாயகத்தின்பாற்பட்ட தேர்தல்கள் சார்ந்த முக்கிய கோட்பாடுகள் அனைத்தையும் துச்சமாக மதித்து மீறியது. தேர்தல் ஆணையாளராலும் உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமைகள் சார்ந்த பல்வேறு அமைப்பாண்மைகளாலும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் இதற்குச் சான்றுபகரும். இந்தத் தேர்தல்கள் பொதுமக்களது விருப்பத்தை எடுத்துரைப் பனவாக அமையவில்லை. அவை, பொதுமக்களது விருப்பத்துக்கு எதிராக மக்களது மதிப்பைப் பெறாத அரசொன்றை ஆட்சிப்பீடத்தில் ஏற்றுவதற்குக் கள்ளத்தனமாகப் பயன்படுத்தப்பட்டன.

ஆலாட்சி அதிகாரியெனப் பலரால் அறியப்பட்ட நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரின் நியமனம் தொடர்பிலும் எனது அரசாங்கம் தேவையான சட்டவாக்கங்களை நிறைவேற்றி உள்ளது. நீதித்துறை பரிகாரங்களைத் தேடுவதற்குப் பதிலாக பிணக்குகளுக்கு விரைவாகவும் குறைந்த செலவிலும் தீர்வு காண்பதற்கென முறைசாரா வழிமுறைகளும் தேவைப்படுகின்றன என்று நாங்கள் கருதுகின்றோம். எமது நாட்டைப் போன்ற நாடொன்றில் சட்டத்துறை நிறுவனங்கள்மீது பொது மக்கள் கொண்டுள்ள விசுவாசத்தைப் பேணிக்காப்பதற்கு செலவு குறைந்ததும் எளிமையானதும் சிக்கலற்றதுமான செயல் முறையொன்று பிணக்குகளையும் சிக்கல்களையும் தீர்ப்பதற்கு அத்தியாவசியமாகும்.

எமது பாரம்பரிய பழக்கவழக்கங்களிலும் எமது சமுதாயத்தின் அரசியல் ஒழுக்கநெறிகளிலும் வேரூன்றியுள்ள ஆலாட்சி அதிகாரி முறையானது அத்தகைய மாற்றுவழிகளுக்கு சிறந்ததோர் உதாரணமாக விளங்குகின்றது. துரதிஷ்டவசமாக அரசியல் யாப்பினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு, ஏற்பாடு செய்யப்பட்ட குறைகேள் அதிகாரி முறையானது நடைமுறையில் நிலவிய சில தடைகள் காரணமாகச் சரியாகச் செயற்படாமல் இருந்தது.

இந்தத் தேவையற்ற சிக்கல்களை அகற்றுவதற்கு வேண்டிய சட்டங்களை ஆக்குவதற்கு எனது அரசாங்கம் ஆரம்ப முயற்சிகளை எடுத் துள்ளதுடன் ஆலாட்சி அதிகாரியிடம் நேரடியாகவும் தடையின்றியும் அணுகும் நன்மைகளை மனக்குறையுற்ற ஆட்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஊழல் ஒழிப்பு

மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்களே, எமது தாய் நாட்டின் பொது வாழ்வுக்கு நேர்மையினையும் மாண்பினையும் கொணரும் நோக்கில் தான் எனது அரசாங்கத்தினால் இச்சீருயர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது சட்டமூலம் கொண்டு வரப்பட்டதென்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். பாராளுமன்றத்தினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டவாக்கத்தின் மூலம், இலஞ்ச, ஊழல்கள் பற்றிய நிலையான ஆணைக்குழுவொன்றை தாபிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அரசியல் தலையீடு அற்ற மிகவும் சுயாதீன ஆணைக்குழுவைத் தாபித்தல்தான் இந்தச் சட்டவாக்கத்தின் மிக விசேட அமிசமாகும்.

முன்னர் நிலவிய இருள்சூழ்ந்த நிலையுடன் ஒப்பிடப்படும் பொழுது இது முற்றிலும் வேறுபட்ட ஒழுங்காகும். இலஞ்ச ஆணையாளரின் திணைக்களம் அக்காலத்தில் நீதி அமைச்சின் கீழும் அமைச்சரவையின் கீழும் செயற்பட்டு வந்தது. தமது மனச்சாட்சிக்கு ஏற்ப அச்சம் அல்லது பாரபட்சம் இல்லாமல் கடமைகளை நிறைவேற்றிய உத்தியோகத்தர்கள் அதிகாரம் படைத்த அரசியல்வாதிகளின் வெறுப்புக்கு ஆளாகியவர்களாய் இடையறாத தொந்தரவுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உட் படுத்தப்பட்டனர். விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழும் நியமிக்கப்பட்ட ஆணையாளர்களின் சேவை அதியுயர் பதவிகளை வகித்த அரசியல்வாதிகளுக்கு எதிரான குற்றச் சாட்டுக்களைப் பற்றிய புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்குச் சற்று முன்னர் திடீரென முடிவு செய்யப்பட்டது.

முன்னைய நிருவாகத்தின் மிகத் தெளிவான அதிகார முத்திரையாக விளங்கிய பாராளுமன்றச் சிறப்புரிமைகளை ஏளனமாக துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கு எனது அரசாங்கம் விரைவான நடிவடிக்கை எடுத்துள்ளது. அந்த அரசாங்கத்தின் பாராளுமன்றத்தைச் சேர்ந்த சபாநாயகர் முக்கிய மான அமைச்சர்களுக்கு எதிராகச் சார்த்தப்பட்டிருந்த இலஞ்சக் குற்றச்சாட்டுக்களின் விசாரணைகள் ஆரம்பமாவதற்குத் தேவைப் படுத்தப்பட்டிருந்த தமது அங்கீகாரத்தை வழங்க மறுத்தார். எனவே, பாராளுமன்ற உறுப்பினர்கட்கு எதிரான இலஞ்சக்

குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யமுன் சபாநாயகரின் அங்கீகாரம் தேவை என்ற நிபந்தனையை ஒழிப்பதற்கு நாம் உடன் நடவடிக்கை எடுத்தோம். அரசாங்க அதிகாரத்தைப் படு கேவலமாக தவறான முறையில் பயன்படுத்துவதை விசாரணை செய்வதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் அதற்குரிய தண்டனை களைத் தட்டிக்கழிக்கவும் நாட்டின் மேலுயர் சட்டசபையின் அங்கத்துவத்தை தமக்குப் பாதுகாப்பாகப் பயன்படுத்தும் சாத்தியம் ஊழல் மிக்க அரசியல் வாதிகள் எவருக்கும் இனி இருக்கப்போவதில்லை. இதன் வண்ணம், குடியரசின் பொது வாழ்வின் வெட்டவெளிச்சமான தன்மை, பொறுப்புக்கூறும்தகவு என்பனவற்றைப் போற்றியும் நிலைநிறுத்தியுள்ளோம்.

எனது அரசாங்கமும் நானும் மிகப் புனிதமானவை எனவும் மீறப்பட முடியாதவை எனவும் போற்றும் சில விழுமியங்கள் உள்ளன. பொதுப் பதவிகள் வகிக்கும் காலத்துக்குரிய சகல விடயங்களிலும் ஆய்வுக்கு உட்படக்கூடிவாறும் நேர்மை வழுவாத வாறும் உறுதியாக நடந்துகொள்வதுதான் எனது பொதுவாழ்வின் அடித்தளமென நான் கருதுகின்றேன். அது, நான் போற்றும் சீரிய விழுமியங்களின் ஒன்றாகும். எனது பெற்றோர்களும் நானும் 67 ஆண்டுகளைக்கொண்ட நீண்டகாலமாக எமது நாட்டின் பொதுவாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளோம். சட்டவிரோதமான அல்லது பொருத்தமற்ற வழிகளின்மூலம் எந்தக் காலத்திலாவது செல்வத்தைப் பெருக்குதலுடன் தொடர்பு கொண்ட குற்றச்சாட்டுப்பற்றிய எந்தத் தகவலும் எங்கள் குடும்பத் தைப்பற்றி எவராலும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை எவரும் மறுக்கமுடியாதவாறு உறுதியாகக் கூறுகின்றேன். அதற்குமாறாக எமது நாட்டுக்கு ஆற்றிய தன்னலம் கருதாத சேவை காரணமாக, எமது குடும்பத்தைச் சேர்ந்த அடுத்தடுத்த வந்த தலைமுறைகள் பெரிதும் செல்வம் குறைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இது நேர்மையானதும் அர்ப்பணிப்பு மிக்கதுமான மாபெரும் சேவை யாகும். அதனையிட்டு நான் சாலவும் பெருமையடைகின்றேன்.

இந்த மரபுரிமைக்கு இசைவாகத்தான் எனது அரசாங்கம் இலங்கையின் பொதுவாழ்வினைத் துப்பரவாக்கும் மகத்தான பணியில் ஈடுபாடு கொண்டுள்ளது. பொதுவாழ்வில் தூய்மையினை ஏற்படுத்தும் இந்தப் பணியானது பகைமை அல்லது வெறுப்பு,

கெட்ட எண்ணம் அல்லது குரோதம் காரணமாக மேற்கொள்ளப் படுவதன்று. எமது நாட்டை ஊழலும் மோசடியும் அற்ற நிலைக்குக் கொண்டு வருவதற்கு உறுதியானதும் தளராததுமான முயற்சி எடுக்கப்படாவிடின் எமது சமூக நிறுவனங்களின் அடித்தளமே சிதைந்து போவது திண்ணம் என்பது எமது உறுதியான நம்பிக்கை யாகும். இம்மாபெரும் ஊழல்களுடன் அரிதான பொருளாதார வளமூலங்களின் சூறையாடுகையும் கொள்ளையடித்தலும் இடம்பெறும் அதே நேரத்தில் இளைஞர்கள் மத்தியில் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்ற அமைதியின்மையும் இருந்து வருகின்றது.

## அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்

ஏலவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய இன் னொரு முக்கியமான விடயம் ஆகும். தற்போதைய அரசியல் யாப்பினை நீக்கவும் நாட்டின் அபிலாசைகளை பூர்த்தி செய் வதற்கு பெரிதும் துணைபுரிவதுமான புதிய அரசியல் யாப் பொன்றை அதற்குப் பதிலாக ஆக்கிக் கொள்வதற்கும் எமது நாட்டு மக்கள் எனது அரசாங்கத்துக்கு மாபெரும் ஆணை யொன்றை வழங்கியுள்ளனர்.

1978 ஆம் ஆண்டில் அரசியல் யாப்பில் அடங்கப்பெற்ற பல சட்ட அமிசங்கள் தத்துவங்களை ஒன்றிணைத்து ஒரே மையத்தில் குவிக்கும் பான்மைகொண்டனவாகும். சுதந்திரம் என்னும் தீச்சுவாலையை அணையாது வைப்பதற்குச்சனநாயக முறைமை யொன்றுக்கு இன்றியமையாத கட்டுப்பாடுகளுக்கும் சமநிலை களுக்கும் எதிராக ஒரு மையத்தில் குவிக்கப்பட்ட இந்த அதிகாரங்கள் செயல்புரிந்தன. நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி முறைமையானது அதனோடு இயைந்த தத்துவங் களின் அண்மைக்காலப் பிரயோகத்தை உற்றுநோக்குமிடத்து அது சிறந்த அரசியல் நிறுவனமாக மதிப்பீடு செய்யப்பட முடியாத நிலையில் உள்ளது. இலங்கையின் அரசியல் யாப்பு முறைமையின் முக்கிய பகுதியாக நிலவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைமையை நீக்குவதற்கும் அதற்குப் பதிலாக பாராளுமன்ற அமைச்சரவை முறைமையோடு இயைந்த அரசாங்கத்தை அறிமுகப்படுத்தவும் எனது அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட பாராளு மன்றமானது அரச அதிகாரத்தின் பிரதான கருவியாக விளங்கும். எவ்வாறாயினும் பாராளுமன்றத்துக்கும் முக்கியமான சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் முறைமையானது பல காரணங்களால் திருப்தியற்ற நிலையில் உள்ளதெனத் தெரிகின்றது. இதன் காரணமாகச் சனநாயகச் செயல்முறைக்கே ஓரளவு பாதிப்பு ஏற்படுவது திண்ணம். மேலும் விருப்புரிமை வாக்குகள் முறைமையானது அரசியல் கட்சிகளுக்குள்ளே மோதல்களையும் பெரும்பாலும் வன்முறைக்கு இட்டுச் செல்லுகின்ற மனக்கசப்பு களையும் என்றுமே கண்டிராத அளவுக்குத் தோற்றுவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் சமநிலை யினைப் பிரதிபலிக்குமாறு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு மன்றம் எமது நாட்டில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சிகளின் அதிதீவிரமான துருவப்படுத்துகை பற்றி பயனுள்ளவாறு ஆராயும். இந்தச் சபையானது முக்கியமான ஆணைக்குழுக்களுக்கு ஆட்களை நியமிப்பதற்குப் பொறுப்பாக இருக்கும்.

அரசியல் யாப்பில் போற்றிப் பேணப்படும் அடிப்படை உரிமைகளை மேலும் வலுவாக்கவும் சட்டவாக்கம் பற்றிய நீதித் துறை மீளாய்வு சம்பந்தமான கோட்பாட்டினை அறிமுகப்படுத்த வும் அரசாங்கச் சேவையின் சுயாதீனத்தைப் பாதுகாக்கவும் உசாத்துணை முறைமைகள் பலவற்றுக்குப் புத்துயிர் அளிக்கவும் பாராளுமன்ற மதியுரைக்குழு முறையினை மேலும் வலுப்படுத்த வும் எனது அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் அரசியல் யாப்பு யோசனைகளில் விசேட கவனம் செலுத்தப்படும்.

அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றிய சகல அமிசங்களையும் அளாவியவாறு அரசியல் கட்சிகளுக்கிடையில் கலந்துரை யாடல்கள் மேற்கொள்ளப்படும் மேடையாக அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழு விளங்கும். இந்த ஆண்டின் யூலை மாத 15 ஆந் திகதிக்குள் இந்த அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயல்முறையானது அனைவரது ஒத்தழைப்புடனும் நல்லெண்ணத்துடனும் இனிது நிறைவேற்றப் படுமென எனது அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முதநிலைத் தேவை வலுவான சிறந்த, பொதுசன அபிப்பிராயமாகும். அத்தகைய பொதுசன அபிப்பிராயம் உருவாக்குவதற்கு சக்திவாய்ந்த, சுதந்திரமான தொடர்புச் சாதனங்கள் இருக்க வேண்டும். எமது நாட்டில் தொடர்புச் சாதனங்கள் நீண்ட காலமாகத் தடைகளும் நெருக்கடிகளும் நிறைந்த ஒரு சூழலில் செயல்பட்டு வந்தன. தொடர்புச் சாதனங்கள் தங்கு தடையின்றி செயல்படக்கூடிய சூழலை ஏற்படுத்த நாம் விரும்புகின்றோம். மக்கள் தொடர்புச் சாதனங்கள் சம்பந்தமான சட்டத்தையும் செயல்முறைகளையும் முற்றாக மாற்றி அமைக்கும் முயற்சியில் நாம் ஏலவே இறங்கியுள்ளோம்.

அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் தாபனத்தின் உடைமையுரிமைப் பாங்கு தொடர்பான விடயங்கள் பற்றியும் பொதுவாக இலங்கையின் அச்சு, இலத்திரோனிக் தொடர்புச் சாதனங்களின் எதிர்காலம் பற்றியும் ஆராய்வதற்குப் பல குழுக்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளன.

**இனப்பிரச்சனை**

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு முக்கிய விடயம் யாதெனில், இனப்பிரச்சினையுடனும் குடியரசின் வட பிராந்தியத்தில் நடைபெற்றுவரும் போருடனும் தொடர்புடையதாகும்.

சமாதானத்தைத் தோற்றுவிப்பதற்கான தொடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற அடிப்படையிலேயே எனது அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது. சென்ற ஆண்டு அடுத்தடுத்து நடைபெற்ற பல தேர்தல்களின் பெறுபேறுகள் இந்நாட்டு மக்கள் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் ஆழ்ந்த உண்மையான விருப்பமுடையவர்களாக உள்ளனர் என்பதை ஐயத்துக் கிடமின்றித் தெளிவாக்கியுள்ளன. உயிர்களுக்கும் வளங்களுக்கும் ஏற்படும் சேதம் சொல்லுந்தரமன்று.

ஐக்கிய தேசியக் கட்சி ஒளிவுமறைவின்றி இனவாத உணர்ச்சிகளைத் தூண்டிய ஒரு சூழ்நிலையில் சனாதிபதித் தேர்தலில் எமக்குக் கிடைத்த பாரிய வெற்றியானது, எமது மக்கள் தம் கூர்மதி காரணமாகச் சமாதானத்தில் எத்துணை நம்பிக்கையும் ஆசையும் கொண்டுள்ளனர் என்பதற்குத் தக்க சான்றாக விளங்குகின்றது. எமது நாட்டில் பரந்து விரிந்து வாழும் மக்கள் பிரிவினர் அனைவரும், சுதந்திர இலங்கையில் முதல் தடவையாகத் திடமான தெளிவான ஒரே குரலில், இனங்களுக் கிடையில் அமைதியையும் சமாதானத்தையும் காண்பதற்கான தம் திடசங்கற்பத்தை வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பலமான தடைகளுக்கும் மத்தியில், சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் முன்னேறிச் செல்வதற்கு எனது அரசாங்கத்துக்குச் சக்தியையும் உற்சாகத்தையும் அளிக்கும் எமது மக்கள், அனைவரதும் வீரத்துக்கும் திடசங்கற்பத்துக்கும் நான் இச் சந்தர்ப் பத்தில் எனது உளமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இனப்பிரச்சினைக்குச் சாதகமான ஒரு தீர்வைக் காண்பதற்கு எமது அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. எல்லாச் சமூகங்களும் பாதுகாப்பாகவும் பந்தோபஸ்துடனும் வாழத்தக்க, மனித கௌரவம் மதிக்கப்படுகின்ற, சமத்துவமாக மக்கள் நடத்தப்படுகின்ற, ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவாழ்வு ஒழுங்கு நிலவுகின்ற ஒரு இலங்கையைக் காண்பதே எமது நோக்கமாகும். தேசிய, பிரதேச, உள்ளூர் மட்டங்கள் அனைத்திலும் தமது தனித்தன்மையை வெளிப்படுத்துவதற்கும் நாட்டின் வாழ்க்கையில் முழுமையாகப் பங்கு கொள்வதற்கும் எல்லாச் சமூகங்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டுமென நாம் நம்புகின்றோம். அகிம்சையிலும் சனநாயகத்திலும் நாம் கொண்டுள்ள பொறுப்பு வாய்ந்த கடப்பாடானது உள்தகராறு, அமைதியீனம் தொடர்பான எமது கொள்கைக்கு உயிரூட்டும் அடக்குமுறை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலகுவான வழியாகும். ஆனால் நீண்ட காலத்தில் அது தேசிய வாழ்க்கையின் அமைப்பை அழித்து விடும். பேச்சு வார்த்தைகளுக்கு உற்சாகமளிக்கின்ற, நம்பிக்கையீனத்தை நலிவடையச் செய்கின்ற, கருத்தொருமைப்பாட்டை வலியுறுத்து கின்ற பொறுமையான, கவனமிக்க, சனநாயக அணுகுமுறையே தகராறுகளைச் சமாதானமாகத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் கடப்பாட்டுக்கு இதயமாக விளங்குகின்றது.

சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் அரச கரும மொழிகளாவும் ஆங்கிலமொழி இணைப்பு மொழியாகவும் கொள்ளப்படுகின்ற அவற்றின் நிலை, உபயோகம் என்பன தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாட்டை முழுமையாகச் செயற்படுத்துவதற்கு அதிகாரமளித்து அரச கரும மொழி ஆணைக்குழு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் தாம் விரும்பும் அரச கரும மொழியில் தம் அலுவல்கள் சம்பந்தமாக அரசுடன் தொடர்பு கொள்வதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் அரசாங்கம் வழங்கும்.

இக்கருத்துடனேயே நாம் அரசாங்கத்தைக் கையேற்று ஒரு சில தினங்களில் சமாதான முயற்சிகளை மேற்கொண்டோம். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கவனமாக ஒழுங்குசெய்யப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினோம். இப்பொழுதிருந்து இரண்டு நாட்களில் சனவரி 08 ஆந் திகதிமுதல் ஆரம்பிக்கவுள்ள மோதல் தவிர்ப்பு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கம் கண்டுள்ளோம் என்பதை இன்று இச்சபைக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் அங்கம்வகிக்கும் அரசியல் கட்சியின் தாபகரான எனது தந்தையாரின் 96 ஆவது ஆண்டுப் பிறந்த நாளை நாம் கொண்டாடும் நன்னாளில் இம்மோதல் தவிர்ப்புத் தொடங்கவுள்ளது. அது அனைத்துச் சமூகங்களிடையேயும் சகோதரத்துவம், அமைதி எனும் மனிதப் பண்புகளினால் ஒளியூட்டப்பட்ட ஒரு புதிய சமாதான, நீதி, சமத்துவ சகாப்தத்தைத் தோற்றுவிக்கும் என நம்புகின்றோம்.

ஆயுதப் போருக்கும் இனப்பிரச்சினைகளுக்கும் வழிகோலியுள்ள அடிப்படை விடயங்களை ஆராய்வதற்கான பேச்சுவார்த்தைகளுக்குரிய ஒரு பீடிகையாகவே இம்மோதல் தவிர்ப்பை எமது அரசாங்கம் காண்கிறது. விரைவில் நாம், அதிகாரக் கைமாற்றம் தொடர்பான யோசனைகளின் தொகுதியொன்றை விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தெரிவிப்போம். இது, பேச்சுவார்த்தைகள் மூலம் ஓர் அரசியல் தீர்வு காண்பதற்குரிய அடிப்படையாக அமையும். எவ்விலை கொடுத்தேனும் சமாதானத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என்பது எமது விருப்பமல்ல ; கண்ணியத்துடனேயே நாம் சமாதானத்தைத் தாபிக்க விரும்புகின்றோம் என்பதை நான் இங்கு வலியுறுத்த வேண்டும்.

உத்தேசத் தீர்வுகள் எல்லாக் கட்சிகளதும் கண்ணியத்தையும் சுயகௌரவத்தையும் பாதுகாக்கும். அத்துடன் அத்தீர்வுகள் எல்லா இனங்கள், கலாசாரக் குழுமங்களதும் அபிலாசைகளுக்கு ஏற்றனவாய் அமையும். அதேவேளையில் பெரும்பாண்மைச் சமூகத்தின் நலனையும் பாதுகாக்கும். நாம் போற்றும் இலட்சியமான சமாதானத்தைத் தேடும் இம் முயற்சிக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரதும் நல்லாதரவு எமது அரசாங்கத்துக்கு உண்டு என்பதை அறிந்து நான் பெரும் உற்சாகமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

## அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள்

இக் கூற்றில் நான் கூறியதுபோன்று தம் சுதந்திரத்தையும் நேர்மையான திறமைமிக்க ஆட்சிக்குத் தமக்குள்ள உரிமையையும் மீளப் பெற்றுக்கொள்வதற்கு மட்டுமன்றி அனைவருக்கும் நியாயமானதும் சமமானதுமான நிலைக்கத்தக்க உறுதியான ஒரு பொருளாதார அமைப்பைக் கட்டியெழுப்பத்தக்க பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்காகவே மக்கள் ஆட்சிப் பொறுப்பை எமக்குக் கையளித்தனர்.

எமக்கு முன்னர் ஆட்சியில் அமர்ந்திருந்தோர் தாங்கமுடியாத வரவு - செலவுத்திட்டக் கடப்பாடுகளைக்கொண்ட மரபுரிமைச் சொத்தாகத் திணறடிக்கச் செய்யும் நிதி, பொருளாதார முகாமைச் சீர்கேட்டைவிட்டுச் சென்றுள்ளனர் என்பதை நான் இங்கு கூறாவிட்டால் நான் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையில் தவறுவிடுவேன். இச்சீர்கேட்டின் விளைவுகள் எத்துணை பிரமாண்டமானவை என்பதை இனிமேல்தான் நாடு உணர வேண்டும்.

1994 இல் ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 58 பில்லியன் ரூபா வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறை, நாம் பதவிக்கு வந்தபொழுது 76.3 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. இவ்வாறாக மேலும் 18 பில்லியன் ரூபாவால் கூடிய பற்றாக் குறையை நாம் மரபுரிமையாகப் பெற்றோம். நாம் எமது திட்டங்களை அமுல்நடத்தத் தொடங்குமுன் இப்பற்றாக்குறையை நிரப்புவதற் குத் தேவையான வளங்களைத் தேடிப்பிடித்தாக வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டு இருந்த

வெளிநாட்டு நிதி பெருமளவில் குறைந்துவிட்டது. ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் கடைசி வருடத்தில் வழங்கப்பட்டு வந்த உலகவங்கி, சர்வதேச நாணய நிதிய தேசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்புகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. கடுமையான கொள்கைத் தவறுகள், ஐ.தே. கட்சி அசராங்கத்தின் ஊழல்கள் என்பவற்றுக்கு ஆட் சேபணை தெரிவிக்குமுகமாக இவ்வாறு செய்யப்பட்டது. குறிப்பாக எயார்பஸ் விவகாரமும் நிலத்தில் ஒடும் பஸ்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களும் சர்வதேச நிதியளிப்பு நிறுவனங்களில் மனக்கசப்பை ஏற்படுத்தின. பாரிஸ் உதவிக்குழு போன்ற இருதரப்பு நிதி வழிகளும், மனித உரிமைமீறல், வடக்கு-கிழக்குப் போரை நிறுத்தத் தவறியமை, திட்டங்களை அமுல் செய்வதில் தாமதம் போன்ற காரணங்களினால் தம் நிதியளிப்பைக் குறைத்துக் கொண்டன.

சென்ற ஆட்சி தனியார்மயமாக்கல் என்ற பெயரில் பெறுமதி மிக்க தேசியச் சொத்துக்களைப் பகற்கொள்ளை அடிப்பதில் ஈடுபட்டிருந்தது. பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா நடைமுறைகளையும் விதிகளையும் மீறியே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டத்துறை நீங்கலாக தனியார் மயமாக்கப்பட்ட ஏறத்தாழ 43 முயற்சிகளுள் சுமார் 75 சத வீதமானவை அரசுமீது செய்யப்பட்ட நிதி மோசடி என்பது அம்பலமாகியுள்ளது.

விளைவுப் பெருக்கத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனும் உரிமைமாற்றம் செய்யப்பட்டபின் தொழில் வாய்ப்புகளைப் பெருக்கும் நோக்கத்துடனே தனியார்மயப்படுத்தல் மேற்கொள்ளப் படுகின்றது. அதன் மூலம் பொதுக் கடன்களை இறுக்கும்பொருட்டு அரசுக்குத் தேவையான வருமானத்தை உருவாக்கிக் கொள்ளலாம். சென்ற ஆட்சியின் கீழ் மக்கள்மயமாக்கப்பட்ட முயற்சி எதிலும் இவ்விரண்டில் எதுவும் நடைபெறவில்லை.

விலைகளை 2/3, 3/4 பங்குகளால் குறைப்பதன்மூலம் இம்முயற்சிகளின் பெறுமதி மொத்தமாகக் குறைத்து மதிப்பிடப் பட்டன. அடுத்து, கொள்வனவு செய்பவர் விலையில் ஒரு சிறு தொகையை மட்டும் செலுத்த, மீதி அரச வங்கியிலிருந்து அல்லது அரச திறைசேரியிலிருந்து கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மக்களின் செல்வம் இவ்வளவு துணிகரமாகக் கொள்ளையிடப் படுவதையும் சூறையாடப்படுவதையும் விரிந்து பரந்த உலகில் நீங்கள் வேறெங்கும் காணமாட்டீர்கள். இன்று இம்முயற்சிகளில் பல வங்கறோத்து நிலையை அடைந்துள்ளன. இவற்றின் ஊழியர் களுக்கு வேதனம் வழங்கத் திறைசேரி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. சுருங்கச் சொன்னால் அரசு இதனால் எப்பயனும் அடையவில்லை. இத் தனியார்மயமாக்கலினால் அரசுக்குத் தொடர்ந்து பொருள் நட்டமே விளைகின்றது. அவை சென்ற ஆட்சியின் மேல் மட்டத்திலிருந்த சில பெரும் புள்ளிகளை மட்டும் குபேரர்களாக்கி யுள்ளன.

சென்ற அரசாங்கத்தின் இந்த "செலுத்தப்படாத உண்டியல் களுக்கும்" மனச்சான்றற்ற பாவச்செயல்களுக்கும் நாம் ஈடு கொடுக்க வேண்டியுள்ளது. நாட்டின் நிதிநிலை இத்தகைய ஆபத்தான நிலையை அடைந்திருப்பதனால், எமது சேமநல, அபிவிருத்தித் திட்டங்களை மிகக் கூடிய விவேகத்துடன் செயல்படுத்த வேண்டும். இல்லையானால் நாம் பணவீக்கத்துக் குத்தான் எண்ணெய் வார்ப்போம். அதனால் பெரும் விலையேற்றம் இடம்பெறும். அது எமது சென்மதி நிலுவையைப் பெரிதும் பாதிக்கும். சேமநலத் திட்டங்கள் கடுமையான விலையேற்றத்தால் அரிக்கப்படுவதை ஏழை மக்கள் காண்பர். வாழ்க்கைச் செலவு தாங்கமுடியாததாகிவிடும். படிப்படியாக நாம் எமது வெளிநாட்டு வளங்களை வீணாகச் செலவுசெய்து விடுவோம். பின்னர் எமது நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாடு நாடாக உலகமெங்கும் சென்று கைநீட்ட வேண்டிய நிலை தோன்றும். பொறுப்புள்ள ஓர் அரசாங்கம் என்ற வகையில், நாம் கடந்த அரசாங்கம் சென்ற கண்மூடித்தனமான வழியில் செல்ல முடியாது. எனவே, நாம் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு வழிவகுக்கும் அதேவேளை, ஒழுங்கு முறைப்படியாக எமது அபிவிருத்தி, சேமநலத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். நாம் மரபுரிமையாகப் பெற்ற வருமான ஊதாரித்தனம் மிகப் பிரமாண்டமானதாகையால் எமது நிதிக் கஷ்டங்களிலிருந்து மீள்வதற்குக் குறைந்த பட்சம் இரண்டாண்டுகளேனும் செல்லும்.

எனது அரசாங்கத்தின் முதலாவது பொருளாதாரக் கொள்கைக்கூற்று 1994, செத்தெம்பர் 13 ஆந் திகதி வெளியிடப் பட்டது. பின்னர் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அக்கூற்றில் அறிவிக்கப்பட்ட கொள்கைகளை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன், அவற்றை இப்பொழுது நாம் செயல்படுத்த முனைகின்றோம். கடந்த செத்தெம்பர் மாதம் தொட்டு உறுதியான பாரியதொரு பொருளாதார, நிதிக் கட்டமைப்பைத் தாபிப்பதில் அரசாங்கம் முன்னேற்றம் கண்டுள்ளது. இது "சந்தை நேயமான" கொள்கைகளுக்கு அத்தியாவசிய முன்-நிபந்தனையாகும். இவ்வமைப்பில் தனியார்துறை பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய இயந்திரமாகின்றது. இது, பணவீக்கத்தைக் குறைப்பதற்கும், துரித பொருளாதார வளர்ச்சிக்கும், ஆக்கபூர்வமான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் அபிவிருத்தியின் பயன்களை நியாயமாகப் பகிர்வதற்கும் உகந்ததாகும். இக்குறிக்கோள்களை அடைவதற்கான முயற்சியில் அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாயம், ஒன்றுக்கு ஒன்று உறுதுணையான எட்டு மூலக் கூறுகளைக் கொண்டதாகும்.

**முதலாவதாக,** மத்திய வங்கியிடம் கடன்பெற்று பண வீக்கத்தைத் தோற்றுவிக்காமல், வருமானப் பற்றாக்குறைக்கு தாங்கக்கூடிய அளவில் வரம்பிட்டு தனது நிதிநிலைமையை சீராக்கும் அதன் எண்ணத்தை மீண்டும் அரசாங்கம் வலியுறுத்துகின்றது. 1993 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 வீதமாகவிருந்த அனைத்து மடங்கிய வருமானப் பற்றாக்குறை 1994 இல் 10 வீதமாக அதிகரித்தது. இதற்குரிய காரணம் பெரும்பாலாக சென்ற ஆண்டு மே மாதம் 01 ஆந் திகதி முன்னைய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பொறுப்பற்ற தேர்தலுக்கு முந்திய "கொடை" களாகும். இதற்கு மாறாக எமது அராசங்கம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் பற்றாக்குறையை மேலும் குறைக்கும் நோக்கத்துடன் 1995 ஆம் ஆண்டுக்கான வருமானப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 வீதமாக குறைப்பதற்கு எல்லா முயற்சியும் மேற்கொள்ளப்படும். அதே வேளையில் ஒரு நடைமுறைக் கணக்குமிகை ஏற்படுத்தப்படும். இதன்பொருள் அரசாங்கத்தை நடத்துவதற்கான நாளாந்தச் செலவுகளுக்குக் கடன்வாங்கி நிதியளிக்கப்படமாட்டாது என்பதாகும். அடுத்த சில ஆண்டுகளில் நாம் பெருமளவில் மிகையை உருவாக்குவோம். அது அரசாங்க முதலீட்டுக்குப் பயன்படுத்தப்படும்.

**இரண்டாவதாக**, 2000 ஆம் ஆண்டுக்கு முன்பு வருமானப் பற்றாக்குறையை மொ. உ. உற்பத்தியில் மூன்று முதல் நாலு சதவீதம்வரை குறைப்பதற்காக குறிக்கப்பட்டுள்ள நடுத்தரக் காலக் குறிக்கோளை அடையும்பொருட்டு 1996 இல் பற்றாக் குறையை 6.5 சதவீதத்துக்கும் 1997 இல் 5 சதவீத்துக்கும் அதிகப் படாத வகையில் குறைப்பதற்கு அரசாங்கம் பொறுப் பேற்றுள்ளது. இதன்பொருள் அரசாங்கம் குறைந்தளவில் கடன் பெறுவதன் மூலம் கணிசமான அளவு தேசிய சேமிப்புகளை தனியார்துறைக்கு விடுவிக்கும். இதன்பயனாக வட்டிவீதங்கள் குறையும்; முதலீடு ஊக்குவிக்கப்படும் ; பணவீக்கம் மிதமாகும். உயர்ந்த வட்டிவீதங்கள் தனியார்துறையின் துரித வளர்ச்சிக்கு ஒரு பெரும் தடையாகும்.

அண்மைக்காலங்களில் தொடர்ந்து இருந்துவந்த இரட்டைத் தான பணவீக்கம் எமது பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதித்தது. இவ்வாறாக 1994 ஆகஸ்டில் இலங்கையில் சராசரி வருடாந்தப் பணவீக்கம் 11.4 வீதமாக உயர்ந்திருந்தது. அதன் விளைவாக நாம் அனைவரும் உயர்ந்த வாழ்க்கைச் செலவினால் சிரமப்பட வேண்டியவர்களாய் ஆக்கப்பட்டுள்ளோம். குறிப்பாக, வறிய மக்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அது வட்டிவீதங்களை உயர்த்தி முதலீட்டுக்கு உற்சாகக் குறைவை ஏற்படுத்தி பொருளாதார வளர்ச்சியைக் குன்றச்செய்து வேலை யற்ற நிலையைப் பெரிதும் வளர்த்துள்ளது. உயர்ந்த பணவீக்கம் மோசமான உள்நாட்டு பொருளாதார முகாமையைப் பிரதி பலிப்பதுடன் முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையீனத்தையும் தோற்றுவிக்கின்றது. 1994 திசெம்பர் அளவில் வருடாந்தப் பண வீக்கம் 8.4% ஆகக் குறைக்கப்பட்டது. ஏற்கனவே, கூறப்பட்டது போல அரசாங்கத்தின் நடுத்தரக்கால இலக்கு பணவீக்கத்தை வருடாந்தம் 5% ஆகக் குறைப்பதாகும். வருமானப் பற்றாக் குறையினை ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்துக்குத் தாழ்த்தப் பட்டபோது இலங்கை ரூபாவை பூரண பரிமாற்ற நிலைக்குக் கொண்டுவர முடியும்.

**மூன்றாவதாக**, 1995 இல் வருமானப் பற்றாக்குறையை குறைப்பதற்கான எமது அணுகுமுறை, தனியார்துறை விஸ் தரிப்புக்குத் தடையான வரி விதிப்புக்களுக்கு இடமளிக்க மாட்டாது. கூட்டு அல்லது சொந்த வருமானங்கள், செல்வம் அல்லது மூலதனப் பயன்கள் என்பவைமீதான வரிவிதிப்பு

அதிகரிக்கப்பட மாட்டாது. பங்குக் கொடுக்கல்வாங்கல்கள்மீது புதிய முத்திரைத் தீர்வை இருக்காது. வருமான நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும்.

**நான்காவதாக,** வருமானப் பற்றாக்குறை முதனிலையில் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதுகொண்டு குறைக்கப்படும். உச்சி முதற்கொண்டு எல்லா மட்டங்களிலும் வீண்செலவுகளை ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இடாம் பீக வாழ்க்கைப் பாங்குகள், சொகுசு வாகனங்கள், அமைச்சர்கள் உபயோகிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை என்பன மட்டுப் படுத்தப்பட்டுள்ளன. ஊழலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஏற்கனவே அரசாங்கச் செலவினங்களில் வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் மூலதனச் செலவு அரசாங்கத்துறை மட்டும் நிறைவேற்றத்தக்க முக்கிய நடவடிக்கைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படும். இவை பிரதானமாக கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத்தொழில் பயிற்சி, சுற்றாடல் பாதுகாப்பு, கிராமப்புற உள்ளமைப்பு ஆகியவை தொடர்பானவையாகும்.

## மனிதாபிமானம் தழுவிய சமூக பாதுகாப்பு ஏற்பாடு

**ஐந்தாவதாக,** அரசாங்கத்துறை மட்டுமே விரிவானதொரு சமூக "காப்பு வலை" ஏற்படுத்த முடியும். இது அரசாங்கத்தின் சமுர்த்தித் திட்டத்தில் அடங்கி உள்ளது. இது தற்போதுள்ள வறுமை ஒழிப்பு, சேமநலத் திட்டங்களைத் திடப்படுத்தி அவற்றின் பயன் உண்மையாகத் தேவையுள்ளவர்களை அடைவதை இலக்காகக் கொண்டிருக்கும். வறுமையில் வாழுகின்றவர்களைக் குறைந்தபட்ச வாழும் மட்டத்துக்கு உயர்த்துவதற்குத் தேவையான வருமானப் பெயர்வுகளுக்கு இத்திட்டம் ஏற்பாடு செய்யும் அதே வேளையில் அவர்களின் சக்திகள் உருப்படியான சீவனோபாயங் களை ஏற்படுத்துவதற்காகத் திரட்டப்படும்.

**ஆறாவதாக,** ஏனைய முதலீட்டுத் தேவைகள் - குறிப்பாகப் பொதுவசதிகள், உள்ளமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு நிதியளிக்கும் சுமை தனியார்துறையைச் சாரும். உதாரணமாக, மின் உற்பத்திக்கான முதலீடு அனைத்தும் எதிர்காலத்தில் நிர்மாணித்து சொந்தமாக்கி இயக்கும்/ நிர்மாணித்து இயக்கி உரிமை மாற்றும் ஏற்பாடுகளின் கீழ் ஊக்குவிக்கப்படும்.

இந்நிலைமை துரிதமாகக் கைத்தொழில்மயமாகும் நாடுகளில் இன்று காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் பல மின் உற்பத்தி, தொலைத்தொடர்புத் திட்டங்களின் நிர்மாணத்தைத் தனியார்துறைக்குப் பொறுப்புச் சாட்டுவதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. அதேபோன்று துறைமுக அபிவிருத்திக்கான முதலீட்டிலும் இவ்வழியே பின்பற்றப்படும்.

தனியார் முதலீட்டின் ஆதரவில், நவீன யுகத்தை இலங்கை அடைவதற்கு இலங்கைக்குத் தேவையான முக்கிய பெருந் தெருக்களை நிர்மாணிப்பதற்கு எல்லா முயற்சிகளும் மேற் கொள்ளப்படும். கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத் தொழில் பயிற்சி, சுற்றாடல் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி முதலியவற்றுக்கு நிதியளிப்பதற்கான அதிகரித்துவரும் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடியவாறு இது அரசாங்கத் துறையையும் உதவியாகக் கிடைக்கும் வளங்களையும் விடுவிக்கும்.

### அரசாங்கத்துறை பொறுப்பு முயற்சிகளின் மீளமைப்பு

**ஏழாவதாக,** அரசாங்கம் அரசாங்கத்துறை பொறுப்பு முயற்சிகளைத் தெரிவுசெய்து தனியார்மயமாக்கும் திட்ட மொன்றை 1995 இல் தொடங்கும். வான் பயணம், காப்புறுதி ஆகியவற்றில் உள்ள சேவைத்துறைகளின் முக்கிய முயற்சிகளை உள்ளடக்கியதாக இது அமையும். சீனி, கடதாசி, உரம், பால் போன்றவற்றோடு தொடர்புகொண்ட கைத்தொழில், வர்த்தகச் செயற்பாடுகளின் அரசுடைமை மாற்றம் விரைவில் பூர்த்தி யாக்கப்படும். கம்பனிகளில் அரசாங்கம் கொண்டுள்ள பெரிய பங்குடைமைகள் சந்தையில் விற்கப்படும். மேலும், அரசாங்கம் பெருந்தோட்டத்துறையில் நீண்டகாலக் குத்தகை நடவடிக்கை களை மேற்கொள்ளும். இம்முயற்சிகளின் உடைமையுரிமையின் ஒரு பகுதியை, ஊழியர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

அதேவேளையில் இம் முயற்சிகளைக் கையேற்கும் தனியார் துறை நிறுவனங்களுக்குச் சிறந்த முகாமைக்கும் இலாபம் பெறுவதற்குமான நிலைமைகள் உறுதிப்படுத்தப்படும். எல்லாத் துறைகளையும் பொறுத்தவரையில் தனியார்மயமாக்கப்பட்ட கம்பனிகளில் அவைகளின் ஊழியர்களுக்கு மூலதனப் பங்குகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இக்கருத்து பல்வேறு தரங்களில் அரசாங்கத் துறை ஊழியர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் பயன்படத்தக்க வகையில் விரிவாக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட சில சந்தர்ப்பங்களில் விசேட நிலைமைகளின் கீழ் தொழில்நுட்ப முகாமைத் திறமைகளையும் நிதிகளையும் அளிப்பதற்காக முக்கியத்துவம் வாய்ந்த முதலீட்டாளர்களைக் கொண்டுவருதல் தேசிய நலனின்பாற்பட்டதாகும்.

தனியார்மயமாக்கல் அரசாங்க வளங்களை அத்தியாவசிய மான பொதுத்துறை முதலீடுகளுக்காகச் சேமித்துப் பெருக்கு வதோடு மட்டுமல்லாமல் முதலீட்டையும் அதிகரிக்கும். அத்துடன் வேலை வாய்ப்புக்களையும் தனியார்மயமாக்கப்பட்ட துறைகள் வழங்கும் சேவையின் தரத்தையும் ஒட்டுமொத்தமாகப் பொருளாதாரத்தையும் அதிகரிக்கச் செய்யும். தனியார்மயப் படுத்தல்மூலம் பெறப்படும் குறிப்பிடத்தக்க வருமானங்கள் பிரதானமாக அரசாங்கக் கடனைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப் படும். இது வட்டிக் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க சேமிப்புக்களை ஏற்படுத்திச் சென்ற காலத்தின் வருமான விரயத்தினால் உருவான “கடன்பொறி” யிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் வழிவகுக்கும். தனியார்மயமாக்கலின் மொத்த விளைவு வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதாக இருப்பினும் மக்கள் தொழில்களை மாற்றும்பொழுது சில தற்காலிக சிக்கல்கள் ஏற்படுதல் தவிர்க்க முடியாததாகும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அரசாங்கம் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் என்று உறுதியளிக்கப்படுகின்றது. தனியார்மயப்படுத்துதலுக்கான அரசாங்கத்தின் அணுகுமுறை முற்றும் ஒளிவுமறைவற்ற தன்மையாலும் வகை சொல்லும் பொறுப்பாலும் வேறுபட்டதாகக் காணப்படும். இந்நிலை சென்ற காலத்தில் ஒரளவும் இருக்கவில்லை. எதிர் காலத்தில் அடி வருடிகளுக்கான தனியார்மயமாக்கல் இடம்பெறமாட்டாது.

**எட்டாவதாக,** கொள்கையின் இந்தப் பல்வேறு அம்சங்களின் சேர்க்கையே இலங்கையை இப்பிராந்தியத்தின் பிரதான நிதிச் சேவை, கப்பற்சேவை நிலையமாகத்திகழச் செய்யும். அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உதவும். உலகின் நிதி அரங்கில் பிரதான பங்கு விகிப்போரைக் கொழும்புக்கு ஈர்ப்பதற்கு இன்னும்

காலம் இருக்கின்றது. இதற்கு, வெளியுலகில் துரிதமாக இடம் பெறும் தொழில்நுட்பத்துறை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கத்தக்க திறமையும் போட்டித் தகுதியும் வாய்ந்த தொலைத்தொடர்புச் சேவையொன்று ஏற்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும். துறைமுகங்களைப் பொறுத்த வரை இப்பொழுது கொழும்பைக் கடந்துசெல்லும் கணிசமான அளவு மாற்றுக் கப்பற் சரக்குகள் கொழும்புக்கு ஈர்க்கப்படலாம். இதற்குப் போதியளவு முறைமுக அபிவிருத்தி இடம்பெற வேண்டும். துறைமுக அபிவிருத்திக்கு முதலீடு செய்வதில் தமக்குள்ள ஆர்வத்தைப் பாரிய சர்வதேசக் கம்பனிகள் ஏற்கனவே தெரிவித்துள்ளன.

விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் பெரும்பாலான சர்வதேச நன்கொடை யாளர்களும் இவ்வுத்திக்குத் தம் ஆதரவைத் தெரிவித்துள்ளன. இவ்வாறாக, இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவு அளிப்பதற்கு ஏற்ற நிலைமைகளை அரசாங்கம் மீண்டும் ஏற்படுத்தும். சமாதானம் நிலைநாட்டப்பட்ட பின்னர் சேதமுற்ற பிரதேசங் களைப் புனரமைக்கவும் புனர்நிர்மாணம் செய்யவும் மேலும் பல உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வுத்தியினை வெற்றிகரமாக அமுல் செய்வதற்கு அனைத் தும் அடங்கிய அபிவிருத்திப் பின்னணியும் அதற்கு ஆதரவான துறைசார் கொள்கைகளும் அவசியமாகும். அதற்கமைய இதனைத் தொடர்ந்துவரும் பிரிவுகள் முதலாவதாக, துரித தனியார்துறை வளர்ச்சியுட்பட எதிர்கால வளர்ச்சி நோக்கு, இரண்டாவதாக, கைத்தொழில், கமத்தொழில், கடற்றொழில், உள்ளமைப்பு, மனித அபிவிருத்தி (கல்வி, சுகாதாரம்), சமுர்தி நிகழ்ச்சித்திட்டம் எனப் பெயரிய அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு வலைத்தொகுதி ஆகிய துறைகளில் முக்கிய ஆதார துறைசார் கொள்கைகள்பற்றி விரிவாக எடுத்துக் கூறுவனவாகும்.

### வளர்ச்சி நோக்கு : 1995 — 2000

வறுமையும் வேலையின்மையும் ஒழிப்பதற்கு இலங்கையின் பொருளாதாரம் சென்ற காலத்தைவிடத் துரிதமாக வளர்ச்சி அடையவேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை வருடாந்தம் 8 வீதத்துக்குத் துரிதமாக உயர்த்துவதற்கும் அதனை

நிலைபெறச் செய்வதற்கும் இடையறாது உழைப்பதற்கு நாம் பொறுப்பேற்றுள்ளோம். இதற்கு முதலீடு கணிசமாக அதிகரிக்கப் படல் வேண்டும். வடக்கு, கிழக்கு மோதல் எமது தேசிய சேமிப்புக்களில் கால்பங்கை உறிஞ்சுகின்றது; மறைமுகச் செலவுகள் இதைவிட மிக அதிகமானதாகும். மோதல் நிறுத்தப்பட்ட பின் வடக்கிலும் கிழக்கிலும் ஏற்படும் சமாதானத்தின்மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 2 சத வீதத்தை விடுவித்து அரசாங்கச் சேமிப்புக்களில் (சமாதானப் பங்கிலாபமாக) சேர்க்க உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறுதியாகப் பிரதான முதலீட்டுச் சுமையைத் தனியார்துறை தாங்க நேரிடும். அரசாங்க முதலீடு தற்போதைய மட்டத்தில் வைத்திருக்கப்பட தனியார்துறை முதலீடு மொ.தே. உற்பத்தியின் 25 வீதம் அளவுக்கு அதிகரிக்க வேண்டும். இதனைச் சாதிக்க முடியுமென்று நாம் நம்புகின்றோம். இது நிறைவேறுவதற்கு எமது பொருளாதாரக் கொள்கைகளும் பொருளாதார முகாமைச் செயற்பாடும் ஒத்திசையத்தக்கவையாயும் முன்னறிந்து கூறத் தக்கவையாயும் இருத்தல் வேண்டும். அதேபோன்று சிறந்த ஒரு முதலீட்டுச் சூழலைப் பேணுவதற்கு அவசியமான அனைத்தையும் நாம் செய்வோம்.

இவ்வளர்ச்சி நோக்குக்கு வெளிநாட்டு முதலீடு வகிக்கும் பங்கு மிக முக்கியமானதாகும். அது மொத்த தனியார் முதலீட்டில் குறைந்தபட்சம் ஐந்திலொரு பங்கையேனும் 2000 ஆம் ஆண்டளவில் கொடுத்துதவும். இது உள்ளமைப்பையும் உற்பத்தியையும் அடக்கியதாகும். அதிக செலவை ஏற்படுத்தி நீண்டகாலமாக இலங்கையில் நடைபெற்றுவரும் இனத்தகராறு வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பதற்குப் பெரும் தடையாக உள்ளது. இப் பிரச்சினைக்குரிய அரசாங்கத்தின் தீர்வு தமிழ்ச் சமூகத்துடன் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் செய்து கொண்ட "பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம்" எனப்படும் ஒப்பந்தத்தின் மீது அவசியமானவற்றைக் கட்டியெழுப்புவதாகும். அவ்வொப்பந்தம் தமிழ் மக்களுக்கு மிகக்கூடிய அதிகாரக் கையளிப்பினையும் ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கான அவர்களது கடப்பாட்டினையும் அடிப்படை யாகக் கொண்டதாகும்.

உரிய வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கும் குறிப்பாக, இலங்கையில் முதலீடு செய்யும்பொருட்டு உலகின் புகழ்பூத்த கம்கனிகளையும் நிதிமுகாமையாளர்களையும் வரவேற்கவும் சகல முயற்சியும் செய்யப்படும். இது, கைத்தொழில் மற்றும் நிதித் துறைகளை விரிவுபடுத்துவதற்கும் முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களையும் ஏற்றுமதிச் சந்தைகளையும் தொடர்ந்து அடைவதற்கும் அவசியமானதாகும். வெளிநாட்டு முதலீடு தொடர்பான தொழில் கொள்கையில் பாதகமான மாற்றமெதுவும் இருக்கமாட்டாது எனச் சென்ற செத்தெம்பர் மாதம் விடுவிக்கப் பட்ட பொருளாதாரக் கொள்கைக் கூற்றில் ஏற்கப்பட்ட பொறுப்பினை அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. வேலை கொள்வோருடன் கூட்டாகப் பேச்சுவார்த்தை நடாத்து வதற்குத் தொழிலாளர்களுக்குள்ள உரிமையை அரசாங்கம் மதிக்கின்றது. அத்தோடு இந்நோக்கத்துக்காக இணக்க ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உற்பத்தித்திறன் விருத்தி களுக்கு சன்மானமாக கூலிகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று நாம் நம்புகின்றோம். எவ்வாறாயினும், பொருளாதார வளர்ச்சிக்கான தேசிய உபாயங்களைச் சீர்குலைப்பதற்கு சிறு குழுக்கள் மேற்கொள்ளும் சட்ட விரோதமான, பொறுப்பற்ற செயல்கள் அனுமதிக்கப்படமாட்டா. இந்த ஏற்பாடுகள் யாவும் தொழில்பட்டய ஆவணத்தில் சேர்க்கப்படும். வேலையில் உள்ளவர்கள் வேலையற்றிருக்கும் பெருந்தொகையானோருக்குத் தொழில் பெறுவதற்குள்ள உரிமைகளை மதிக்க வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்துகின்றது. அதே போன்று அம்மேலதிக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு இன்றியமையாத வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்து செயல்பட வேண்டுமெனவும் அவை அதிக அளவில் செய்யப்படல் வேண்டுமெனவும் அரசாங்கம் வலியுறுத்துகின்றது.

## துறைகள் அளாவிய கொள்கைகள்

### 1. கைத்தொழில் கொள்கை

கைத்தொழில் கொள்கை தொடர்பில் அரசாங்கம் பின்வரும் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கருதுகின்றது:

* ஆசியாவில் சிறந்த செயலாற்றுகையுடைய பொருளாதாரங்கள் கண்ட அனுபவத்தின் மீது எமது கைத்தொழில் கொள்கை அமைக்கப்பட்டுள்ளது. குறைந்த பணவீக்கத்தையும் வட்டிவீதங்களையும் நோக்கிச் செல்கின்ற பெரும்பரிமாணப் பொருளாதார நிறுவனங்களைத் தாபிப்பதன்மூலம் சூழலுக்கு இதமானதும் நிலைபெறத்தக்கதுமான கைத்தொழில் வளர்ச்சியினைப் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். பெரிதும் திறந்த வர்த்தக முறைமையினையும் நெகிழ்வினைக்கொண்ட நாணயமாற்று வீதங்களையும் கொண்ட இந்த நடவடிக்கையானது ஆக்கவிசை கொண்டதும் சர்வதேச அடிப்படையில் போட்டிகரமானதும் ஏற்றுமதி நெறிப்பட்டதும் பல்வகைப்படுத்தப்பட்டதுமான கைத்தொழில் துறையொன்றை உருவாக்க உதவும். அத்தொழில்துறை மிக நவீன தொழில் நுட்பங்களைக் கொண்டு விளங்கும். உயர்ந்த தொழில் நுட்பத்தினைக் கொண்ட சுற்றாடலைப் பாதிக்காத கைத்தொழில்களை இங்கு கொண்டு வருவது விரும்பத்தக்கது. அதே நேரத்தில் ஆடைத் தொழிற்சாலைகளைவிட தொழிலாளர்களைக் கூடுதலாகப் பயன்படுத்தக்கூடிய சுற்றாடலைப் பாதிக்காத கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பும் உண்டு. மூலதனத்தை ஏற்பாடு செய்வதன்மூலமும் தொழில்நுட்பத்துறைகளோடும் ஏற்றுமதிச் சந்தைகளோடும் உறவுகளைப் பேணுவதன் மூலமும் வெளிநாட்டு முதலீடுகள் இந்தச் செயல்முறைக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்வனவாகும்.

* அரசாங்கம் தனியார்துறைக்குத் திறந்ததும் ஒளிவுமறைவு அற்றதுமான சட்டக் கட்டுக்கோப்பினையும் சந்தைக்கிதமான முதலீட்டுச் சூழலினையும் ஏற்படுத்திக் கொடுக்கும். சந்தைகள் நிச்சயமாகத் தோல்வி அடையக்கூடிய துறைகளில் மட்டுமே அரசாங்கம் தலையீடு செய்யும். விடயத்துக்கு ஏற்றவாறு

கொள்கைத் திட்டமிடலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். உற்பத்தித்துறை, கைத்தொழில், சேவைகள் ஆகிய துறைகளுக்குரிய கொள்கைகள் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யப்படவும் ஒருங்கிணைக்கப்படவும் அரசாங்கத்துறை, தனியார்துறை, உயர் தொழில்துறை, தொழிற்சங்கத்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிக்கின்ற தேசிய அபிவிருத்திமன்றமொன்று தாபிக்கப்படும்.

* திறமையற்ற கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதானது வேகம் கொண்டதும் நிலைபெறத்தக்கதுமான கைத்தொழில்மயமாக்கத்துக்கும் சமூக சமநிலைக்கும் உதவ மாட்டாது. அத்தகைய கொள்கைகள் சீனா, வியட்நாம் உள்ளிட்ட ஆசியாவின் இயக்கவிசை கொண்ட பொருளாதாரங்கள் நிலவும் நாடுகளால் கைவிடப்பட்டவைகளாகும். கைத்தொழில்துறையின் வினைத்திறமையானது அரசாங்கத்தின் வர்த்தகத் தாராள மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக அபிவிருத்தி செய்யப்படுவதுடன் தற்போதைய பல்தொகுதித் தீர்வை முறைமையும் 1998 ஆம் ஆண்டுக்குள் 15% இற்கு மேற்படாமல் இருக்கும்வகையில் ஒரு சீரான இறக்குமதித் தீர்வையினை அறிமுகம் செய்யும்பொருட்டுப் படிப்படியாகச் செறிவான நிலைக்குக் கொண்டுவரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

* தற்போதைய முதலீட்டு ஊக்குவிப்பு முறைமையானது பல முறைவழுக்களையும் பாகுபாடுகளைக்கொண்ட தான்தோன்றித் தனமான அறவீடுகளையும் புறநடைகளையும் வரிவிலக்குகளையும் கொண்டுள்ளதொன்றாகும். அரசாங்கம் இப்பொழுது மேற்கொண்டுள்ள வர்த்தகத் தாராளமயமாக்குகை நிகழ்ச்சித் திட்டத்தின் ஓரமிசமாக எளிமையானதும் வெளிப்படையானதுமான ஊக்குவிப்பு முறைமையினை ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான மாற்றங்களை அரசாங்கம் மேற்கொள்ளும். வரி விடுமுறைகளை அகற்றி அதற்குப் பதிலாக ஏற்றுமதி இலாபத்தின்மீது இருபது ஆண்டுகாலத்துக்கு 15% வரியினை அறவிடுதல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

* பரந்துபட்ட கைத்தொழில்மயமாக்கலையும் தொழில் வாய்ப்பு வளர்ச்சியினையும் நோக்கிச் செல்லுகின்ற பயனுறுதி வாய்ந்த சிறுபரிமான மற்றும் இடைப்பரிமான கைத்தொழில்களை நிறுவுவதற்கு அரசாங்கம் உதவி செய்யும். அரசாங்க நிதியங்களை வீணாக்கித் தரங்குறைந்த பண்டங்களை அதிக விலைக்கு

நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யத் தூண்டிய முன்னைய சுயகாப்புக் கொள்கைகள் நிலவிய காலத்துக்குத் திரும்பிச் செல்லாதவாறு இந்த அரசாங்க உதவி வழங்கப்படும். வரையறுக்கப்பட்ட தமக்கே சொந்தமான வளமூலங்கள் உள்ளவர்களாகவும் வர்த்தக வங்கிகளிலிருந்து கடன்களைப் பெறுவதற்குப் பிணைப்பணம் இல்லாதவர்களாகவும் உள்ள சிறுபரிமாண மற்றும் இடைப்பரிமாண தொழில் உரிமை யாளர்களுக்கு உதவும் நோக்கில் நிகர மதிப்பு நிதியமொன்றை அல்லது உத்தரவாதமுடைய நிதியமொன்றைப் போன்ற நிதிவழங்கும் முறைமைகளைத் தாபிப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது. இதன்மூலம் ஐந்தாண்டுக் காலப் பகுதிக்குள் 20,000 சிறுபரிமாண மற்றும் இடைப்பரிமாண கைத்தொழில்களை நிறுவவும் அவற்றில் 2,50,000 தொழிலாளர் களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கவும் கருதப்படுகின்றது. இது மொத்தப் புடவைத் தொழிற்துறையில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளவர்களின் எண்ணிக்கைக்குச் சமமானதாகும். பெரும் பரிமாண நவீன உற்பத்தியாளர்களோடு உறவினைப்பேணுவதன் மூலமும் தொழில்நுட்ப அறிவினைப் பரிமாறிக்கொள்வதன் வாயிலாகவும் சிறுபரிமாண மற்றும் இடைப்பரிமாண கைத் தொழில் களுக்கு வலுவூட்டப்படும்.

* இலங்கைத் தொழிலாளர்கள் மிகுந்த எழுத்தறிவினைக் கொண்டவர்களாக இருந்தபோதிலும் கைத்தொழில் தர முயர்த்துகைக்கும் பல்வகைப்படுத்துகைக்கும் இன்றியமையாத திறமைகள் அற்றவர்கள் ஆவர். அரசாங்கத்தினால் நடாத்தப்படுகின்ற தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் பொதுக் கல்வி முறைமையும் வழங்கல் தேவைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளபடியால் கைத்தொழிலுக்கு ஏற்புடைய திறமை யுள்ளவர்களைப் பயிற்றுவிப்பதில் அவ்வளவு முன்னேற்றம் காணவில்லை எனலாம். தேவைக்கு ஏற்றவாறு அமையும் வகையில் வாழ்க்கைத்தொழில் பயிற்சிமுறைமை விரிவாக மீளளிப்புச் செய்யப்படும்.அந்த மீளமைப்புக்கு அத்தகைய பயிற்சியினைப் பெற்றவர்களைச் சேவைக்கு அமர்த்திக் கொள்ளும் தனியார்துறையினரது ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொள்ளும். மிகவும் பயனுறுதி வாய்ந்த தேர்ச்சிப் பயிற்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தேர்ச்சிகள் அபிவிருத்தி நிதியமொன்றும் நிறுவப்பட உள்ளது.

* அதேபோன்று தனியார்துறையின் செயலார்வமிக்க பங்குபற்றுதலுடன் கைத்தொழில்களின் தொழில்நுட்பச் சேவை களைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு அரசாங்கத்தின் கைத் தொழில், அபிவிருத்தி நிறுவகங்களை விரிவாக மீளமைப்புச் செய்யவும் சர்வதேச சந்தைகளில் தேவைப்படுத்தப்பட்ட விலைக் கட்டளைகளையும் பண்புக் கட்டளைகளையும் கொண்டுசென்று ஒப்படைத்தல் கட்டளைகளையும் அடையும்பொருட்டு தனியார் துறையினருக்கு உதவவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

* பிராந்திய அபிவிருத்தியினைக் கருதி கிராமப்புறங்களில் தூய்மைக்கேட்டுக்கு இடம்தராத பெரும் பரிமாண மற்றும் சிறுபரிமாண கைத்தொழில்களை நிறுவுவதற்கு ஊக்கம் அளிக் கப்படும். இந்தப் பிரதேசங்களில் தனியார்துறை முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு அடித்தள வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

* கமத்தொழில்மூலக் கைத்தொழில்களை ஆதரிப்பதற்கும் முடிந்த கமத்தொழில் உற்பத்திகளைத் தயாரிப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

**2. வர்த்தகக் கொள்கை**

அரசாங்கக் கட்டுப்பாடுகளின் வாயிலாக விலைவாசி அதி கரிப்புக்களைக் கட்டுப்படுத்துவற்கு வர்த்தகத்தை ஒழுங்கு றுத்துவதன்மூலம் பயனின்மையைக் கண்கூடாக அறிந்த பின்னர் உற்பத்திக்கும் விநியோகத்துக்கும் இடையிலான போட்டா போட்டியை ஆதரிப்பதற்கு எனது அரசாங்கம் பூரணமாக உறுதி கொண்டுள்ளது. எவ்வாறாயினும், பருவகால அல்லது செயற்கையான பற்றாக்குறைகள் சந்தைகளில் ஏற்படும்பொழுது பற்றாக்குறைகளை எதிர்நோக்கவும் விலைகளை உறுதியான நிலைக்குக் கொண்டுவரவும் அத்தியாவசியப் பண்டங்கள் சந்தையில் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் உதவியை நாட உள்ளது. இந்த வரையறைக்குட்பட்ட தலையீடானது போட்டிகரமான சந்தை களுக்குப் பதிலாக வேறு சந்தைகளை நிறுவும்பொருட்டு எடுக்கப்படும் நடவடிக்கையல்ல.

உரிமப்பத்திரம் வழங்குதல், விடயத்துக்கேற்ற கட்டணங்களை அறவிடுதல், பாதுகாப்பு, சுகாதாரக் காரணிகளைத் தவிர ஏனையவற்றுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் என்பனவற்றைப் போன்ற வர்த்தக இடையூறுகள் யாவும் நீக்கப்படும். உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகள் சர்வதேச அடிப்படையில் போட்டிகரமாகத் திகழுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் ஏற்றுமதிச் சுங்கவரிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு எளிதாக்கப்படும். இந்த நடவடிக்கை இறுதியாக ஏற்று மதிகளுக்குத் துணைபுரியும். ஏற்றுமதிச் சந்தைகளைப் பிடித்துக் கொள்வதற்கும் பேணுவதற்கும் உதவிகளை வழங்குவதன்மூலம் ஏற்றுமதி நெறிப்பட்ட பொருளாதார வளர்ச்சி மேலும் ஊக்கு விக்கப்படும். நாணயமாற்று விகிதக்கொள்கை நெகிழ்வானது, இடையறாத ஏற்றுமதி வளர்ச்சியை உறுதி செய்யும்.

### 3. கமத்தொழில் கொள்கை

கமத்தொழிலினதும் கிராம மக்களினதும் இன்றைய கவலைக்கிடமான நிலைப்பாட்டினை உற்று நோக்குமிடத்து கடந்தகாலக் கொள்கைகள் எவ்வளவு தூரம் தோல்வியடைந் துள்ளனவென்பதைக் காண முடியும். கமத்தொழில்துறையினைப் பாதுகாப்போம் என அழகான வார்த்தைகளில் அதனைப் போற்றிய முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக, மிகவும் சமமில்லாத நிபந்தனைகளின்கீழ் ஏனைய துறைகளுடன் கமத்தொழிற்றுறை போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கைத்தொழிற்றுறைக்கு அளிக்கப்பட்ட அதியுயர் சுயகாப்பு விதிகளை எதிர்த்துப்போராட வேண்டிய நிலை கமத்தொழிற்று றைக்கு ஏற்பட்டது. கமத்தொழிற்றுறையில் இலாபம் ஈட்டுவதைக் குறைப்பதற்கும் முதலீட்டுச் சிக்கல்களைக் குறைப்பதற்கும் ஏதுவான தாபனரீதியான மற்றும் கொள்கை ரீதியான தடைகளை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். கமக்காரர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு உறுதியானதும் சாதகமானதுமான விலைகளைக் கொடுக்க உதவும்வகையில் செம்மையான சந்தை வசதிகளை ஏற்படுத்துவதிலும் இடுகை களையும் தொழில்நுட்ப அறிவினையும் வழங்குவதிலும் மட்டுமே கமத்தொழில்துறையில் அரசாங்கம் தலையிட நேரும்.

வேறுவிதமாகக் கூறின், பணிவாட்சித்துறையாலும் வேண்டாத ஒழுங்குவிதிகளை விதிப்பதனாலும் எமது கமக்காரர்களின் சுயாதீனத்தையும் படைப்பாற்றல்மிக்க சக்தியினையும் பாதிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தும்வகையில் புதிய கமத்தொழில் அபிவிருத்தித்திறமுறை ஆக்கப்பட்டுள்ளது. கிராம மக்கள்மீதும் பகுத்தறிவார்ந்த தெரிவுகளை ஆக்கிக்கொள்வதற்கு அவர்களுக்குள்ள திறமையின்மீதும் எங்களுக்கு அபார நம்பிக்கை உண்டு. கமக்காரர்களும் மீனவர்களும் ஏனைய விவசாயத் தொழிலாளர்களும் மிகவும் திறந்த சவால்கள்மிக்க போட்டிகர மான சூழலொன்றின்கீழ் சகலவிதமான தடைகளையும் தாண்டி சுபீட்சத்தை நோக்கிச் செல்லக்கூடியவாறு அவர்கள் அனை வருக்கும் உதவுவது அரசாங்கக் கொள்கையின் முக்கிய அமிசமாகும்.

அத்தகைய உருமாற்றத்துக்கு முக்கியமான கட்டமைப்பு மாற்றங்கள் தேவைப்படுகின்றன. விரைவளர்ச்சி காணுகின்ற பொருளாதாரம் நிலவும் நாடுதன்னில் நீண்டகால அடிப்படையில் சர்வதேச மற்றும் உள்நாட்டு விலைகள் குறைந்து செல்லும் போக்கினைக்கொண்ட பண்டங்களை மாத்திரம் உற்பத்தி செய்வதற்கு கமத்தொழில் உற்பத்தியாளர்கள் நிர்பந்திக்கப் படுமிடத்து அவர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் வறுமையில் அமிழ்ந்து வாடும் நிலைக்குத் தள்ளப்படுவர். அவர்கள் அன்றாடப் பிழைப்புக்குக் கமத்தொழிலில் ஈடுபாடு கொள்வதைக் கைவிட்டுக் கூடிய வருமானம் தரும் பண்டங்களை உற்பத்தி செய்யும் வர்த்தக முறையின்பாற்பட்ட கமத்தொழிலினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

கைத்தொழில்துறையும் கட்டுமானத்துறையும் சேவைகள் துறையும் விரிவு அடையும் போது முதநிலை மற்றும் பதனிடப்பட்ட பண்ணை உற்பத்திகள் பலவற்றுக்கான உள்நாட்டுத் தேவையும் அதிகரிக்கும். உலகச் சந்தையில் உள்ள மாபெரும் வளவாய்ப் பினைப் பயன்படுத்திக் கொள்ளும்பொருட்டு உற்பத்தியாளர் களுக்கு அவர்களது உற்பத்திகளைப் பல்வகைப்படுத்தி ஏற்றுமதி செய்யவும் ஊக்குவிப்பு அளிக்கப்படும்.

இந்த அகல்விரிவான கொள்கைக் குறிக்கோள்களை எய்தும்நோக்கில் தீட்டப்பட்டுள்ள அரசாங்கத்தின் செயல் திட்டத்தில் பின்வரும் பிரதான புதிய சீர்திருத்த நடவடிக்கைகளும் சேர்க்கப்பட்டுள்ளன:

* கடந்த காலத்தில் நிலவிய சமமில்லாத பெரும்பரிமாண பொருளாதார மற்றும் வர்த்தகக் கொள்கைகள் காரணமாகத் தோன்றியுள்ள கமத்தொழில்துறைக்கு எதிரான மறைமுகமான ஓரங்காட்டுதலினை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்க்கமான முறையிலும் விரைவாகவும் நடவடிக்கை எடுக்கும்.

* கமத்தொழில் சந்தைகளிலுள்ள சகலவிதமான ஏகபோக உரிமைகள் நீக்கப்பட்டு போட்டாபோட்டிக்கான வசதிகள் பேணிக் காக்கப்படும்.

* ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உள்நாட்டுக் கமத்தொழில் பொருள்கள் சார்ந்த விலைகள் சர்வதேச விலைகளின் மட்டத்துக்குக் கொண்டுவரப்படும்.

* சந்தைகளின் தேவைகளைக் கூடிய அளவில் பூர்த்தி செய்யக்கூடியவாறு கமத்தொழில் ஆராய்ச்சி முறைமை மீளமைப்புச் செய்யப்படும். ஆராய்ச்சித் திட்டமிடல் சபைகளில் கூடிய பங்கினை ஏற்றுச் செயல்புரிவதற்கு உற்பத்தியாளர் களுக்கும் ஏனைய தனியார்துறை பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். விலைவாசிகள்பற்றியும் சந்தை நிலைவரங்கள் பற்றியும் தகவல்களைக் கொடுக்கும் பொருட்டுக் கமத்தொழில் சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்று உருவாக்கப்படும். இந்த நடவடிக்கைகள் யாவும் கமத்தொழில் விளைவுப் பெருக் கத்தை அதிகரிப்பதற்குத் துணைபுரிவனவாகும்.

* நாட்டின் நீர்ப்பாசனத் திட்டங்கள் சார்ந்த பாரிய முதலீடு களின் நிருவகித்தலோடு சம்பந்தப்பட்ட அரசாங்கத்துறைக்கும் தனியார்துறைக்கும் இடையில் மிகப் பொருத்தமான தொழில் பகிர்வினை ஏற்படுத்துவற்கு நாங்கள் கருதுகின்றோம். மகாவலி குடியிருப்புத் திட்டங்களில் வாழுகின்ற கமக்காரர்களில் பலர் மாதமொன்றுக்கு ரூபா 1,500 இற்கும் குறைவான வருமானத்தைப்

பெற்று வருகின்றனர் என்பது எமது நாட்டுக்குக் கவலைதரும் விடயமாக அமைந்துள்ளது. இதன்வண்ணம், இந்த மாபெரும் முதலீட்டுத் திட்டங்கள் சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இடையறாத வறுமைநிலையினைத் தோற்றுவித்துள்ளன என்பது புலனாகும். வினைத்திறமையினை அதிகரிக்கும் நோக்கில் வருங்காலத்தில் மேற்பரப்பு நீரேந்து பகுதிகளையும் நீர்த்தேக்கங் களையும் பராமரிப்புச் செய்தல் மற்றும் முகாமிப்புச் செய்தல் சம்பந்தமான அடிப்படைப் பொறுப்பு மகாவலி அதிகாரசபை யிடம் ஒப்படைக்கப்படும். இந்த முக்கிய பணிகளில் கூரிய கவனம் செலுத்தும்பொருட்டு ஏனைய நிறுவனங்களால் பொறுப் பேற்கப்படக்கூடிய துணைநிலையான செயற்பாடுகள் மகாவலி அதிகாரசபையிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும். குறிப்பாக, வர்த்தகச் செயற்பாடுகள் தனியார்துறைக்கு ஒப்படைக்கப் படலாம். ஆற்றின் கீழ்ப்பாகத்துத் தொழிற்பாடுகளும் பராமரிப்புப் பணிகளும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏற்புடைய அரசாங்க முகவராண்மைகளிடமும் விவசாயிகளின் நிறுவனங்களிடமும் ஒப்படைக்கப்படலாம்.

* கமத்தொழில் விளைவுப் பெருக்கத்தையும் வருமானங் களையும் மேம்படுத்துதலும் பண்ணைகளோடு தொடர்பற்ற வேலைவாய்ப்புக்களை உருவாக்குதலும் கிராமங்களில் உள்ள வறுமையினைத் தீர்ப்பதற்கான உருப்படியானதும் நீண்ட காலத்துக்குச் செல்லுபடியானதுமான தீர்வுகளாக அமை கின்றன. அண்மையிலுள்ள நகரங்களில் வேலைவாய்ப்புக் களை உருவாக்குவதலுக்கு அதிமுன்னுரிமை வழங்கப்படும். தற்பொழுது உள்ளமைப்பு வசதிகள் இன்மையால் தனியார் துறையினர் சூழவுள்ள பிரதேசங்களில் முதலீடு செய்வதற்கு அவ்வளவு விருப்பம் கொள்வதில்லை. வெளிப்புற வேளாண்மை யில் ஈடுபாடு கொண்ட கமக்காரர் தொழில்முயற்சிகளின் பெறுமானத்தை அதிகரிக்கவும் கமத்தொழில் அடிப்படை யிலமைந்த கைத்தொழில்களில் முதலீடு செய்ய தனியார் துறையினரை ஊக்குவிக்கவும் வீதி வசதிகளையும் தொலைத் தொடர்பு வசதிகளையும் மேம்படுத்துவதற்கான பிரதான கிராம உள்ளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இந்த விருப்பமின்மைக்குப் பரிகாரம் காணலாம்.

* தமது சொத்துக்களை மிகச் சிறந்த முறையில் பயன் படுத்தப்படுத்துவதற்கான சுதந்திரமும் வளவாய்ப்பும் கமக்காரர் களுக்குக் கொடுக்கப்படும். கமத்தொழில் குடியிருப்புத் திட்டங் களில் உள்ள காணிகளைக் குத்தகைக்கு விடுதல்பற்றிய கட்டுப்பாடுகள் உடனே நீக்கப்பட்டு குடியிருப்பாளர்களுக்கு இறையிலி உரித்துறுதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். விரும்பியவாறு காணிகளை பயன்படுத்துவற்குத் தடைகள் விதிக்கப்படமாட்டா.

* நீடு நிலைக்கக்கூடியவாறு வேதனங்களையும் சமூக உள்ளமைப்பினையும் மேம்படுத்த வழிகோலும்வகையில் விளைவுப் பெருக்கத்தினை அதிகரிப்பதற்கு நீண்டகாலம் வரை பெருந்தொகையான மூலதனங்களை உடனடியாக முதலீடு செய்யும் அவசரத் தேவை பெருந்தோட்டத்தொழில்துறைக்கு உள்ளது.

* கைமாற்றத்தகு நெடுந்தவணைக் குத்தகைகளுக்கும், காணி உபயோகம் சார்ந்த இடரின்மைக்கும் வழிசெய்து தற்போதுள்ள ஒழுங்குவிதிகள் மாற்றப்படும். இந்தக் குத்தகைக்களுக்கான விலை களைக் கூறுவதற்குத் தற்போதுள்ள கம்பனிகளுக்கும் புதிய முதலீட்டாளர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். தெரிந்தெடுக் கப்படும் விலைகூறுபவர்கள் நிகர மதிப்பு மூலதனத்தை செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுவர். கடந்தகால தவறான முகாமிப்பினால் ஏற்பட்ட சுமைகளைத் தாங்கிக்கொள்ளும்படி அவர்கள் கேட்கப்படமாட்டார்கள். அரசாங்க நிதிகளை ஏப்பமிடுகின்ற ஒப்பேறாத பெருந் தோட்டங்கள் விற்பனை செய்யப்படும். தொழிலாளர்களினதும் முகாமிப்பாளர்களினதும் பரஸ்பர கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்ட பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான கூட்டு உடன்படிக்கைகளையும் விளைவுப் பெருக்கத்துக்கும் வேதனங்களுக்கும் இடையிலான உறவுகளையும் பேணி ஆதரிக்கப்படும்.

* சிறிய நீரேந்து நிலங்களின் அடிப்படையில் சிறிய பண்ணைகளில் கூட்டிணைக்கப்பட்ட காணி உபயோக முறையினைப் பின்பற்றுமாறு கமக்காரர்களுக்கு ஊக்குவிப்பு

அளிக்கப்படுவதுடன் பண்ணையில் உள்ள செயற்பாடுகள் யாவும் தனியான அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் ஒருங்கிணைக் கப்படவும் ஊக்கமளிக்கப்படும். பொருத்தமான காணி, நீர் முகாமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலானது பயிர்-வேளாண்மை விலங்கு உற்பத்திச் செயல்முறையின் இணைபிரியாத அமிசமாக ஆதரிக்கப்படும்.

* சேதனப் பசளைகளின் பயன்பாடு, ஒருங்கிணைக்கப்பட்ட பீடை முகாமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், ஏனைய நிலப் பயிரியல் நடைமுறைகளை கையாளுதல் போன்ற நட வடிக்கையின்மூலம் மண்வளங்களைப் பேணி இரசாயன உரங் களின்மீது விவசாய இரசாயணப் பொருள்களின்மீதும் கொண் டுள்ள சார்பு நிலையானது படிப்படியாகக் குறைக்கப்படும்.

* மேல்நில, தரைமட்ட, வழிந்தோடுகின்ற நீரினை ஒன்றுபடுத்தப்பட்டவாறு பயன்படுத்துவதற்கு கூட்டிணைக்கப்பட்ட திட்டமொன்று வகுக்கப்பட்டு சுற்றாடல் காரணிகளை நன்கு கவனத்திற்கொண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

* தற்போது நிலவுகின்ற கமக்காரர் அமைப்பாண்மைகள் கூட்டுறவுச் சங்கங்களின் அல்லது பொதுக் கம்பனிகளின் நிருவாக நியதிகளின் அடிப்படையில் மீளமைக்கப்பட்டு மீளொழுங்கு செய்யப்படும். அங்ஙனம் செய்வதன்மூலம் அவற்றின் வினைத்திறமையினை மேற்படுத்திக் கமத்தொழில் செயற் பாடு களும் சம்பந்தப்பட்ட சேவைகளும் ஏற்புடைய அரசாங்க மற்றும் தனியார்துறை அமைப்பாண்மைகளோடு கூட்டிணைக்கப்படும்.

* கமநலச் சேவை நிலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு உற்பத்திச்சேவை நிலையங்களாக மீளமைப்புச் செய்யப்படும். இந்த நிலையங்கள் கமக்காரர் அமைப்பாண்மைகளின் பிரதி நிதிகளாலும் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் சேவைத்துறை களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்க உத்தியோகத்தர் களாலும் பங்குபற்றுகை அடிப்படையில் முகாமிப்புச் செய்யப் படும். இந்த நிலையங்களினூடாக ஆராய்ச்சி மற்றும் சந்தைகள் பற்றிய தகவல்கள், தரக் கட்டுப்பாடுபற்றிய பயிற்சியும் வழி காட்டுகையும், அரசாங்கத்துறை மற்றும் தனியார்துறையைச்

சேர்ந்த பயன்பாட்டு அமைப்பாண்மைகளோடும் குழுக்களோடும் உறவுகளைப் பேணுதல், சட்ட உதவிகளை வழங்குதல் முதலியன உள்ளிட்ட தாபனரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான சேவைகள் வழங்கப்படும்.

* மேற்சொல்லப்பட்ட நடவடிக்கைகள், இன்று சீரழிந்துள்ள கமத்தொழில் நீடிப்புச் சேவைகளை மீளமைப்புச் செய்யத் துணை புரிவனவாகும்.

* காணி, நீர், காடுகள், கடற்றொழில் வளமூலங்களை இடையறாது பேணக்கூடிய வகையில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகளையும் சந்தை ஊக்குவிப்புகளையும் ஒருங்கே பயன்படுத்துவதன்மூலம் சுற்றாடல், வழிகாட்டுகைகள் ஆக்கப்பட்டு அமுலாக்கப்படும்.

### 4. கடற்றொழில் அபிவிருத்தி

கடற்றொழில்துறை சார்ந்த அரசாங்கத்தின் கொள்கையின்கீழ் மீன்களின் உற்பத்தி, சீரிடல், சந்தைப்படுத்துதல் முதலிய பணிகள் தொடர்பில் தனியார்துறையினர்மீது அதிக நம்பிக்கை வைக்கப்படும். அத்துடன் சந்தை அடிப்படையிலான மூலவள முகாமிப்பினையும் ஒழுங்குறுத்துகையினையும் பொறுத்தவரை அரசாங்கத்துறையின் கடமைப்பங்கு மீளமைக்கப்படும். கரையோர மீன்பிடித்துறையில் தற்போதைய வளமூலங்களை உற்றுநோக்குமிடத்து கடற்றொழில் முகாமிப்புக்கும் வளமூலங்களின் பேணுகைக்கும் சிக்கனமான மீன்பிடித்தல் முறைகளைக் கடைப்பிடித்தலுக்கும் நீரோட்ட திசைசார்ந்த மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்ற கடற்றொழில் அபிவிருத்தித் திறமுறையொன்றை வகுத்துக் கொள்ளும் தேவை ஏற்பட்டுள்ளதெனத் தெரிகின்றது.

மீன்பிடிக் கைத்தொழில் இதுகாறும் வேட்டையாடும் நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடலுயிர்களை வளர்க்கும் நவீன மீன்பிடிக் கைத்தொழிலாக அது இந்த நாட்டில் இன்றும் வளர்ச்சியடையவில்லை. மீனவர் சமூகத்தில் உள்ள வறுமையும் குறைந்த மீன் உற்பத்தியும் இந்த நிலைமைக்கு ஏதுவான பிரதான காரணிகளாகும். மீன்பிடிக் கைத்தொழிலினை

நவீனமயமாக்கும் கொள்கையினை அறிமுகப்படுத்தித் தேசியப் பொருளாதாரத்தில் இந்தத்துறைக்கு உயர்வானதோர் இடத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதன்வண்ணம், பின்வரும் செயல்திட்டம் அமுலாக்கப்படும் :-

* அரசாங்கத்துறையின் கீழ், கரையோர வசதிகளுக்கேற்ப உள்ளமைப்பு வசதிகளை ஏற்பாடு செய்தல், கடற்றொழில் நீடிப்பு வசதிகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சார்ந்த பணிகள் மீன்பிடித் துறைமுகங்களை புனரமைப்புச் செய்து பராமரித்தல், கப்பல் செல்லும் வழிகள், துணைக்கருவிகள், பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு நடவடிக்கைகள் முதலியன ஏற்பாடு செய்து கொடுக் கப்படும். காலியிலும் கிரிந்தையிலும் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* மீனவர் சமூகங்களுக்கு சமூக நன்மைகளை உருவாக்கித்தரும் பொருட்டும் ஏனைய சேவைகளை வழங்கும்பொருட்டும் நமது நாட்டுக்கே சிறப்பான கூட்டுறவுச்சங்க அமைப்பினை வலுப் படுத்தி பலரது பங்குபற்றுதலுடன் அதிக நன்மைகளை வழங்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அது அரசாங்கம் வழங்கும் உதவிகள் மீனவர்கள் பலரிடம் எளிதில் சென்றடையக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தும்.

* நவீன மீன்பிடி வள்ளங்களையும் இயந்திரங்களையும் மீன்பிடிக் கருவிகளையும் உபகரணங்களையும் ஏனைய துணைக் கருவிகளையும் கடற்றொழிலுக்கு வழங்கும் பொருட்டு விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடற்கொள்ளைக்காரர் களிடமிருந்து கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்களையும் மீனவர்களையும் பாதுகாப்பதற்கு அவசியமான சட்டங்கள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

* கப்பலோட்டுகை பற்றிய மேம்படுத்தப்பட்ட முறைகளையும் புதிய தொழில்நுட்பங்களையும் மீனவர்களுக்குக் கற்றுக்கொடுப் பதற்கென தேசியக் கடற்றொழில் பல்கலைக்கழக நிறுவக மொன்று தாபிக்கப்படும். இந்த ஏற்பாட்டின் கீழ் மீனவர்கள்

தேர்ச்சிமிக்க கப்பலோட்டிகளாகப் பயிற்சி பெறுவர். அப்போது அவர்களிடம் கரையோரத்தையும் கடலினையும் பாதுகாக்கும் பணியும் ஒப்படைக்கப்படக்கூடும்.

## 5. உள்ளமைப்பு வசதிகள் அபிவிருத்தி

தீவிரப் பொருளாதார வளர்ச்சிக்கு இடையறாது விரிவடையும் உள்ளமைப்பு வசதிகளின் துணை தேவைப்படுகின்றது. இந்த விடயத்தைப் பொறுத்தவரை உள்ளமைப்பு வசதிகளுக்கென மொத்தத் தேசிய உற்பத்தியின் 3.50 – 4.0% வரை முதலீடு செய்யும் தாழ்ந்த வருமானத்தைக்கொண்ட நாடுகளையும்விட மிகத் தாழ்ந்த நிலையில் இலங்கை உள்ளதென்பது அச்சத்தை உண்டு பண்ணுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியின் மிகக் கூடுதலான சதவீதத்தை உள்ளமைப்பு வசதிகளுக்கென ஒதுக்கீடு செய்யும் நாடுகளோடு ஒப்பிடும்பொழுது எமது நிலை மிகக் கேவலமானது. எடுத்துக்காட்டாக, 1981 – 85 காலப்பகுதியில் மலேசியா அதன் மொத்தத் தேசிய உற்பத்தியின் சுமார் 8% மும் 1986 – 90 காலப்பகுதியில் 6% இற்கு மேற்பட்ட தொகையும் உள்ளமைப்பு வசதிகளுக்கென ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும் இலங்கையில் உள்ளமைப்பு சேவைகளுக்கான தேவை 1990 களில் பெரிதும் அதிகரித்துள்ளது. உதாரணமாக, மின்வலுக்கான கிராக்கி 1993 ஆம் ஆண்டில் 10% இற்கும் மேல் அதிகரித்தது. இந்த அதிகரிப்பு கடந்த 20 ஆண்டுகள் காலப்பகுதியில் 7.8 வீத சராசரி அதிகரிப்பாகவே இருந்ததென்பது இங்கு ஒப்புநோக்கற்பாலது. சமீபத்திய வருடங்களில் பண்டக் கொண்டுசெல்கைச் சேவைகளுக்கான கிராக்கியானது 12% இற்கும் மேற்பட்டு அதிகரித்து வந்துள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தி வருடமொன்றுக்கு 8% வரை அதிகரிக்கும்போது உள்ளமைப்பு வசதிகளின் தேவைகள் இன்னும் அதிகரித்த வீதங்களில் ஏற்றம் காணும்.

தற்போதுள்ள உள்ளமைப்புச் சேவைகளின் விநியோகத் திறமையினை அபிவிருத்தி செய்ய வேண்டியது உண்மையாகும். அத்துடன், உள்ளமைப்புக்கான முதலீடுகளும் பெருமளவில் அதிகரிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கின்றது. ஏலவே

குறிப்பிட்ட வரவுசெலவுத் திட்ட மட்டுப்பாடுகளைக் கருத்திற் கொள்ளும்போது அரசாங்கத் துறை சார்ந்த முயற்சியாக இதனை முன்னெடுத்துச் செல்வதற்கு நிதி வசதிகள் அரசாங்கத்துக்கு இல்லை என்பது புலனாகும். எனவே, பொது வசதிகளுக்கும் உள்ளமைப்பு வசதிகளுக்கும் தனியார்துறையினர் நிதியுதவி செய்து அவற்றை நடாத்தும் முக்கிய பணியினை மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படும். நிர்மாணிப்பு, செயற்படுத்துகை, உடைமையில் வைத்திருத்தல்/ நிர்மாணிப்பு செயற்படுத்துகை, கைமாற்றுதல் ஆகிய ஏற்பாடுகளின் கீழும், அரசாங்கத்துக்குச் சொந்தமான உள்ளமைப்புச் சேவைகள் சிலவற்றைத் தனியார் மயப்படுத்துகையின் கீழும் இதனைச் செய்யலாம். அதன்மூலம் அந்த உள்ளமைப்புக்களின் விரிவாக்கலுக்கும் நவீனமயப்படுத்து கைக்கும் வினைத்திறமைக்கும் தேவையான பாரிய முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

அதன்வண்ணம், பின்வரும் உள்ளமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் :-

* மின்வலுவினைப் பொறுத்தவரை நி. செ. உ./நி. செ. கை. ஏற்பாடுகளின் கீழ் பல மின்வலுப் பொறித்தொகுதிகளைத் தாபிக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அத்தகைய கருத்திட்டங்களில் ஒன்று இலங்கையில் மிகப்பெரிய வெளிநாட்டு உதவியுடன் இயங்கும் ஒரு கருத்திட்டமாக அமையப்போகின்றது. தொலைபேசித் தொடர்புமுறையின் தேவை இரண்டுமடங்கு அதிகரித்து வருகின்றது. வாகன நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் பிரதான நெடுஞ்சாலைகளின் கொள்திறனைத் துரிதமாக அதிகரிப்பதற்கும் பல கடுகதி வீதிகளையும் ஊடுகடத்தும் பாலங்களையும் நி. செ. உ/ நி செ. கை. ஒழுங்குகளின் கீழ் அமைப்பதற்கான முதநிலைத் திட்டங்கள் அரசாங்கத்தினால் தற்பொழுது வரையப்பட்டு வருகின்றன.

* துறைமுகங்களுக்கும் கப்பற்சேவைத் துறைகளுக்கும் பிரதான வளர்ச்சித்துறைகளாக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன. கொழும்பிலும் காலியிலும் உள்ள துறைமுகங்களை பிரதான துறைமுகங்களாக அபிவிருத்தி செய்து அவை போட்டி கரமான கப்பற்மாற்றுகை நிலையங்களாக மாற்றப்பட்டு இலங்கை யின் இயற்கைவளமிக்க திறமுறையார்ந்த நிலைப்பாட்டினை

மேலும் உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வரு கின்றது. கொழும்பு, காலி ஆகிய துறைமுகங்கள் வெளிநாட்டுக் கடன் பண உதவியைக் கொண்டு விசாலிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு நி. செ. கை. ஒழுங்கின்கீழ் பிரதான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவியும் கிடைக்கும்.

*கப்பற்றுறையோடு தொடர்புகொண்ட பணிகளுக்காகவும் சுற்றுலாத்துறை மற்றும் சுற்றாடலோடு தொடர்பு கொண்ட செயற் பாடுகளுக்காகவும் திருகோணமலைத் துறைமுகம் விருத்தி செய்யப்படும். காங்கேசன்துறை துறைமுகமானது மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட உள்ளது. ஒலுவில் துறை முகமானது புதிதாகக் கட்டப்பட உள்ளது.

*தற்போதைய வருமானம் சார்ந்த இடர்களையும் பொருட் படுத்தாது வீடமைப்புத்துறையோடு சம்பந்தப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஆரம்ப நடவடிக்கை எடுக்க உள்ளது. தனியார்துறையின் பங்குபற்றுதலுடன் சுயநிதிவழங்கல் முறையொன்றின் அடிப்படையில் வீடுகளைக் கட்டத் துணைபுரியும் உள்ளமைப்பு வசதிகளையும் ஏனைய வசதிகளையும் ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் ஆரம்ப நடவடிக்கை எடுக்கும். நடந்தேறும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாகக் காணிகள், உள்ளமைப்பு வசதிகள், ஏனைய சேவைகள் என்பனவற்றை வழங்குவதற்கு அரசாங்கம் ரூபா 240 மில்லியன் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் நகரப் பிரதேசங்களில் வாழுகின்ற தாழ்ந்த வருமானங்களைப் பெறுபவர்களினதும் தாழ்ந்த நடுத்தர வருமானங்களைப் பெறுபவர்களினதும் வீடமைப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

சேமிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குகொண்டு வைப்புப் பணங்கள் அதிகரிக்கும் அடிப்படையில் வீடுகளைக் கட்டுவதற்குச் சிறிய கடன்களைப் பெற்றுக்கொள்தவன்மூலம் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்குக் குறைந்த வருமானம் பெறுகின்ற கிராமக் குடும்பங்களுக்கு உற்சாகம் அளிக்கப்படும். பெருந்தோட்டத் துறையில் விருத்தி செய்யப்பட்ட வீடுகளை அமைப்பதற்கும் அரசாங்கம் நிதி உதவி வழங்க உள்ளது.

*அரசாங்கத்தின் நேரடிப் பண உதவிகள் இல்லாமல் மத்திய வர்க்கத்தினருக்கான வீடுகள் பலவற்றைக் குறைந்த செலவில் கட்டியெழுப்புவதற்கெனப் பணம் முதலீடு செய்யும்படி மிகப் பெரிய பல்தேசியக் கம்பனிகள் இரண்டுடன் நாங்கள் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளோம்.

### 6. மனிதவள அபிவிருத்தி : கல்விக் கொள்கையும் சுகாதாரக் கொள்கையும்

எமது மக்களது கல்வியினையும் சுகாதாரத்தினையும் மேம் படுத்துதல் இந்த அரசாங்கத்தின் முக்கிய முன்னுரிமைகளாகத் திகழுகின்றன. அவை, சமூக சமத்துவத்துடனும் நிலைபெறத்தக்க மனித அபிவிருத்தியோடும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்து வதற்கு உபயோகிக்கப்படும் பிரதான உத்திகளாகும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கல்விக்காகவும் சுகாதாரச் சேவைக் காகவும் செலவிட்ட பணத்தை பாரிய அளவில் குறைத்தது. எனது அரசாங்கம் இக் கவலைக்கிடமான போக்கைச் சீராக்கும்.

இலங்கையில் மனித அபிவிருத்திச் சாதனைகள் சர்வதேச ரீதியில் கீர்த்தி பெற்றவை; 70 ஆண்டுகளைத் தாண்டும் ஆயுள் எதிர்பார்ப்பு, ஏறத்தாழ 90% மான எழுத்தறிவு, இரண்டாம் நிலைக் கல்விக்கு 75% பாடசாலை அனுமதி, முதநிலைக் கல்விக்குத் 90% அனுமதி. இவை வழக்கத்துக்கு மாறான உயர்மட்ட சமூகச் செல வினங்களின் விளைவாகச் சாதிக்கப்பட்டவைகளாகும். அதாவது 1950 முதல் 1980 வரையான மூன்று தசாப்தங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரி 9 - 10 வீத கல்வி, சுகாதாரம் மற்றும் சேமநலம் என்பவற்றுக்குச் செலவிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 1990 ஆம் ஆண்டுகளில் இச் செலவினங்கள் மொத்தத் தேசிய உற்பத்தயின் 6% மாகக் குறைந்தன. குறிப்பாகக் கல்விக்கான செலவு வியப்புறத் தக்கவகையில் குறைக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டுத் தொடரில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% மாக இருந்த கல்வித்துறைச் செலவினம் 1990 ஆம் ஆண்டுத் தொடரில் 2% மாகக் குறைக்கப்பட்டது. மொத்த அரசாங்கச் செலவினத்தில் ஒரு பங்காக கணிக்கையில் கல்விக்கான நிதியளிப்பு மேலும் கடுமையாக 15% இலிருந்து 5% இற்கும் கீழ் குறைந்தது. உதாரணமாக, கல்விக்காக மலேசியா அதன் வரவுசெலவுத் திட்டத்தில் செலவிடும் 18% தோடும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.5% தோடும் ஒப்புநோக்குகையில் வேறுபாடு தெளிவாகத் தெரிகின்றது.

இதன்விளைவாக, முதநிலை, இரண்டாம் நிலை கல்வியின் தரம் வீழ்ச்சியுற்று உள்ளது. அத்துடன், தேக்கநிலையில் இருந்த உயர்கல்வித்துறை ஓர் உயிர்த்துடிப்புள்ள பொருளாதாரத்தின் தேர்ச்சித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு வளர்ச்சியுற வில்லை. பாடசாலைகளுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையிலான வளப்பங்கீடு மேலும் மேலும் சமமற்றதாகக் காணப்படுகின்றது. தவிர்க்கக்கூடிய நோய்கள் அதிக அளவில் பரவுகின்றன. மலேரியா மீண்டும் நாடுமுழுவதும் பரவக்கூடிய நிலை தோன்றி அச்சுறுத்திக்கொண்டு இருக்கின்றது. சிறுவர்களின் மந்த போசனை அதகரித்து உள்ளது. இதனை நாங்கள் அனுமதிக்க முடியாது.

கல்வித்தரத்தின் வீழ்ச்சி கணிதம், விஞ்ஞானம் மற்றும் அன்னிய மொழிகள் ஆகிய துறைகளில் வியப்பூட்டத்தக்கவகையில் காணப்படுகின்றது. நாம் உயர் தொழில்நுட்பவியல் கொண்ட பொருளாதாரத்தை அடையவேண்டுமானால் இத்துறைகளில் உயர்மட்டத் தேர்ச்சி இன்றியமையாததாகும். மூன்றாம் நிலைக் கல்வி முறையின்வளர்ச்சி குன்றியிருப்பது மாத்திரமன்றி அவ்வயதுக்குரிய குழுவைச் சார்ந்தவர்களில் 2.5% மானோர் மாத்திரமே பல்கலைக்கழகத்துக்குச் சென்றனர். அது ஆக்கபூர்வ மான தொழில்களுக்குத் தேவையான திறமைகளை உருவாக்கவும் தவறியுள்ளது. இதன்விளைவாக, வேறுவழியின்றி அரசாங்கம் தொழில் வாய்ப்புக்களைக் கொடுக்கும் நிறுவனமாக இயங்கிவருகின்றது.

அரசாங்கத்தின் நெடுந்தவணைத் திறமுறையின்கீழ் கல்விக்கும் சுகாதாரத்துக்கும் ஒதுக்கப்படவுள்ள தேசிய, அரசாங்க வளங்கள் தீர்க்கமாக அதிகரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உண்மையில், முன்னர் கூறியதுபோல பெரும்பரிமாண பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து ஏற்படாதவகையில் இத்துறைகளுக்குரிய நிதியளிப்பை அதிகரிக்குமுகமாகத்தான் அரசாங்கம் வேறுதுறைகளில் முதலீடு செய்யும்பொறுப்பை இயன்றவரை தனியார்துறைக்கு மாற்றி வருகின்றது.

மேற்கூறிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்பொருட்டு அரசாங்கம் பின்வரும் செயல்திட்டத்தை முன்வைக்கின்றது :—

**கல்வி**

* கல்வித்துறையினைப் பொறுத்தவரை நாடு முழுவதிலும் தரமான கல்விக்கு சமமான வாய்ப்புகளை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தும்நோக்கில் வசதி குறைந்த பாடசாலைகளுக்கும் பிராந்தியங்களுக்கும் பொருத்தமான நிதி உதவுகைத் திட்டத்தின் மூலம் நிதியங்களை மீள ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கும்.

* கல்வியின் தரத்தினை உயர்த்துதல் மிக அவசரமான பணியாகும். பாடவிதானங்களும் கற்பித்தல் முறைகளும் பயனுள்ளனவாகவும் ஏற்புடையனவாகவும் விளங்கும் படி மீளாய்வு செய்யப்படும். மனப்பாடம் செய்யும் பழக்கத்தை நீக்குவதற்கு இந்தப் பாடவிதானங்கள் மிக நவீன கற்பித்தல் முறைகளுடன் இணங்கக்கூடிய நிலைக்கு கொண்டு வரப்படும். கற்பித்தல் தொழிலுக்குப் பெருமாண்பும் உயர்தொழில் திறமையும் கொண்டு வரப்படும். ஆசிரியர்கள் தமது உயர்ந்த சேவையினை வினைத்திறமையுடனும் அர்ப்பணிப்புடனும் ஆற்றும் பொருட்டு அவர்களுக்குத் தேவையான கருவிகளை மீண்டும் வழங்கித் தேர்ச்சிகளின் தரத்தை உயர்த்துவதற்கான வசதிகளும் ஊக்குவிப்புகளும் வழங்கப்படும். இதனைச் சாதிக்கும் முதல் நடவடிக்கையாக அரசாங்கம் ஆசிரியர் சேவையிலுள்ள அனைத்துத் தரங்களுக்கும் ஏலவே சம்பள அதிகரிப்பை வழங்கியுள்ளது.

* கைத்தொழில் கொள்கை என்னும் விடயத்தின் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு, வாழ்க்கைத்தொழில் பயிற்சி முறைமையின்கீழ் வேலைவாய்ப்புத் தேவைகளுக்கு ஏற்ற பயிற்சியினை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய சீரிய வளமூலங்கள் ஏற்பாடு செய்யப்படும்.

* மூன்றாம் நிலைக் கல்வி முறைமையானது மீளமைக்கப்பட்டு விரிவாக்கப்படும். அரசாங்கச் சேவை ஊழியர்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையாக அல்லாமல் ஏற்புடைய வேலைகளுக்கான கைத்தொழில் தேர்ச்சிகைளப் பயிற்றுவிக்கும் உயர்ந்த தரம்வாய்ந்த ஆராய்ச்சியும் தொழிற்றுறை நிபுணத்துவமும் வழங்கக்கூடிய ஒரு முறைமையாக அது மாற்றப்படும்.

## சுகாதாரம்

* சுகாதாரத்துறையில் மூலதன முதலீடுகளைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மீண்டும் முன்னைய நிலைக்கு கொண்டுவரப்படும்.

* தடுக்கத்தக்க நோய்க் கட்டுப்பாட்டுக்கும் முதநிலை மட்டத்து வசதிகளுக்கும் கொடுக்கப்படும் கவனத்தை அதிகரிக்கும் வகையில் சுகாதரத்துறைக்கு வழங்கப்படும் நிதிகள்சார்ந்த முன்னுரிமைகள் மாற்றப்படும். மலேரியா ஒழிப்புத் திட்டம் தீவிரமாக அமுலாக்கப்படும். சுகாதாரத்துறை நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக நீர்வழங்கும் வசதிகளும் துப்புரவு ஏற்பாட்டு வசதிகளும் சீராக்கப்படும்.

* இடைக்கால நடவடிக்கையாக சுகாதாரத்துறைக்கான நிதி உதவிகள் அதிகரிக்கப்பட்டு வறிய மக்களுக்கும் கிராமப் புறங்களுக்கும் போதுமான சுகாதார வசதிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் முகமாக நிதி உதவிகள் சீரானமுறையில் ஒழுங்கு செய்யப்படும். உயர்தொழில்துறைத் தேர்ச்சிகளின் அபிவிருத்திக்காகவும் சுகாதாரத்துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு மனவூக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

* மிக வறிய குடும்பங்களில் பிறந்த சிறார்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட நலன்புரிச் செயல்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படுவதுடன் அந்த வளமூலங்கள் பாரிய உணவூட்டக்குறைவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவி செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

### 7. சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் - அரசாங்கம் முன்வைக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டம்

சுகாதாரம், உணவூட்டம், கல்வி, வாழ்க்கைத்தொழில் பயிற்சி முதலியவற்றில் முதலீடு செய்வதன்மூலம் வறியமக்கள் வாழ்வாங்கு வாழ்வதை உறுதிப்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் நிலையான அடிப்படையொன்றின்கீழ் வறுமையினை ஒழிக்க அறிமுகப் படுத்தப்பட்டுள்ள சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் குறை நிரப்புச் செய்யப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது தற் போதுள்ள அனுபவ அறிவினைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு இந்த நாட்டிலும் இந்த நாட்டுக்கு வெளியிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற சிறந்த நடைமுறையை அனுசரித்து வகுக்கப்பட்டதொன்றாகும். வெற்றிகரமான வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் யாவும் துணைக்குழுக்களாக ஒன்றிய வறிய மக்களாலே ஒழுங்கு செய்யப்படுவனவாகவும் அதிக சேமிப்பு களைச் செய்யக்கூடியவாறு சமூக வளத்திரட்டுகையோடு உருப்படியான கருத்திட்டங்களை வகுத்துக்கொண்டு கூடுதலான சுயநம்பிக்கையுடன் செயற்படுத்தப்படுவனவாகவும் திகழ்கின்றன. இந்த செயல்முறையில் அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களின் ஈடுபாடும் வரவேற்கத்தக்கதாகும். சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பின்வரும் அமிசங்கள் அடங்குகின்றன:

* இத்திட்டம் உள்ளூரில் கல்விகற்ற இளைஞர்களின் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் சமுர்த்தி முகவர்களின் இந்த சமூகத் திரட்டுநர்களின் ஈடுபாடு, செயல்நோக்கம் என்பன இத்திட்டத்துக்கு ஆணிவேராக இருக்கும். அவர்கள் சமுர்த்தித் திட்டத்திலிருந்து பயன்பெறுவோரை இனங்காண்பதற்கான அளவாய்வுகளை நடத்துவதுகொண்டு தம் பணியை ஆரம்பிப்பார்.

* சமுர்த்தி இயக்கத்தின் இலக்கு வருமானப் பங்கீட்டு அளவுத் திட்டத்தின் அடித்தளத்திலுள்ள 30 - 35% மான (10,00,000 — 12,00,000 குடும்பங்கள்) குடிசனங்களாவர். இவர்களில் 7,00,000 முதல் 8,50,000 வரையானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர். இவர்களின் வருமானம் நாடளாவிய அடிப்படை யில் ஆகக் குறைந்தது மாதமொன்றுக்கு ரூபா 1,500 முதல் ரூபா 2,000 வரை அதிகரிக்கப்பட உள்ளது. வரவுசெலவுத்

திட்டத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படும். சேமிக்கும் வழக்கத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும்பொருட்டு நன்மைபெறுநர்கள் அவர்தம் படிகளின் ஒருபகுதியை சேமிப்பதற்கு ஊக்கப்படுத்தப்படுவர்.

* மிகவும் வறுமைப்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்கள் சுயவிருப்பத்தின்படி சேமிப்பாளர்களாகவும் எதிர்காலத்தில் கடன்பெறுவோராகவும்/ தொழில் முயற்சியில் ஈடுபடுபவர் களாகவும் தங்களைப் பிரித்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுவர். சேமிப்பாளர்களுடைய சேமிப்புக்கள் தேசிய சேமிப்பு வங்கியில் திறக்கப்படும் சொந்தச் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்பில் இடப்படும். அவருக்கு வட்டியும் வழங்கப்படும். ஐந்தாண்டுகளின் இறுதியில் அல்லது வறுமைப்பட்ட ஒரு குடும்பம் மாதாந்தம் (ஏனைய வருவாய்கள் உள்ளிட்ட) ரூபா 2,000 வருமானத்தைத் தொடர்ந்து ஆறு மாதங்களுக்குப் பெறுகின்ற வசதி ஏற்படுமிடத்து மூலதனமாகச் சேமித்துள்ள தொகையை அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

* எதிர்காலத் தொழில் முயற்சியாளர்கள் சுயவிருப்பப்படியான குழுக்களாக ஓர் ஒழுங்கான அமைப்புக்குள் கொண்டுவரப்பட அவர்களின் சேமிப்புகள் தேசிய சேமிப்பு வங்கிக் கணக் கொன்றில் சேர்ந்துவரும். தூய சேமிப்பாளர்களுடன் ஒப்பு நோக்கப்படுமிடத்து இக்குழுக்கள் தாம் தீர்மானிக்கும் மேலதிகத் தொகையொன்றைச் சேமிப்பவர்களாவர். உதாரணமாக 200 குடும்பங்களைக் கொண்ட கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றில் மிகவும் வறுமைப்பட்டவர்களின் இலக்குக்குழு 45 குடும்பங்களைக் கொண்டதாக இருக்கும். இவர்கள் அனைவரும் முதலீடு செய்ய முன்வந்தால் சேமிப்புத் தொகையாக 1,00,000 ரூபா திரண்டு விடும். சேமிப்புகள் 60,000 ரூபாவை அடையும்பொழுது ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுமுள்ள சுயேட்சைக் குழுக்கள் ஒன்றுசேர்ந்து சமுர்த்தி சங்கமொன்றைத் தாபிப்பதற்கு எதிர் பார்க்கப்படுகின்றன. அது பங்குபற்றும் குடும்பங்களுக்கு கடன் களை வழங்கும். எடுத்த கடனைத் திருப்பிச் செலுத்தும் பழக்கத்தை வளர்ப்பது அத்தியாவசியமாகையால் அக்குழுவைச் சேர்ந்த எந்த நபருக்கும் வழங்கப்படும் முதலாவது கடன் அந்தக் குழுவின் சேமிப்புக்களிலிருந்தே வழங்கப்படும். அக்குழுவின்

ஏனைய அங்கத்தவர்கள் கடன்வழங்குபவர்களாக இருப்பர். அவசியத்தின் நிமித்தம் இக்கடன்கள் ஒருசில நூறு ரூபாக் களைக்கொண்ட சிறுதொகைகளாகவே இருக்கும். அடிப் படையில் இது அவசரத் தேவைகளை நிறைவேற்ற உதவும்.

* சமுர்த்தி வங்கிகள் வறிய மக்களின் தேவைகளை நிறைவேற்ற உதவுகின்ற அடிமட்டச் சேமிப்புக் கடன் நிறுவனங் களுடன் இணைந்து செயலாற்ற எதிர்பார்க்கப்படுகின்றன. இவற்றில் சனச, சர்வோதய போன்ற அரசாங்கம் சாரா அமைப்புகளும் அடங்கும். இதில் வேறு சில அமைப்புகளையும் சேர்த்துக்கொள்ள முடியும். அரசாங்கம் சாரா அமைப்புகள் இல்லாத பிரதேசங்களில் சமுர்த்தி வங்கிகள் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி போன்ற நிதிநிறுவனங்களில் இணைந்து கொள்ளலாம். தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள சேமிப்புகள் அத்தகைய நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டபின் அவற்றிலிருந்து குழுக்கள் கடன்களைப் பெறலாம். தொடக்கத்தில் குழுக்களின் சேமிப்புக்களிலிருந்தும் பின்னர் வேறு நிதிமூலங்களிலிருந்தும் கடன்களைப் பெறலாம். சனசக்தி நம்பிக்கை நிதியத்தின் பங்காளர் அமைப்புக்களைப் பொறுத்த வரை மேலதிக வளங்கள் நடைமுறையில் உள்ள உலக வங்கி வறுமை ஒழிப்புக் கடன்களிலிருந்து வரலாம். சனசக்தி நம்பிக்கை நிதியம் இப்பொழுது தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியமாக மாறும். பங்குபற்றும் அரசாங்கம் சாரா அமைப்புகள் அனைத்தும் இந்த நிதியத்தின் கீழ் பங்காளர் அமைப்பு அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ள ஊக்குவிக்கப்படும். இந்நிறுவனங்கள் கைக்கொள்ளும் கடனளிப்பு முறைகளைப் பின்பற்றிச் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும்.

## முடிவுரை

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே,

சென்ற அரசாங்கத்தின் வன்செயல்களினாலும் ஊழலினாலும் திறமையீனத்தினாலும் கடுமையாகச் சேதமுற்ற அரசியல், சமூக, பொருளாதார அமைப்புகளைக் கொண்ட ஒரு நாட்டை ஆட்சி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட பாரிய பொறுப்பினை எனது அரசாங்கம் ஏற்றுள்ளது.

இந்நாட்டைச் சரியான வழியில் செலுத்தும்பொருட்டு சனநாயக நிறுவனங்களை மீண்டும் நிர்மாணித்து மனித உரிமைகளைக் காத்துப் பலப்படுத்த வேண்டியுள்ளது. அரசாங்கச் செயல் முறைகள் வெளிப்படையானவையாக இருப்பதையும் ஊழல் அற்றனவாக இருப்பதையும் நாம் உறுதிப்படுத்தல் வேண்டும். அத்துடன், பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் அவரவர்களின் செயல்களுக்கு வகைசொல்லும் பொறுப்புடைய வர்களாக இருப்பதையும் நாம் நிச்சயப்படுத்தல் வேண்டும்.

பொருளாதார ரீதியில், நிலைபெறத்தக்க ஒரு மனித, பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கத்தக்க சுதந்திரச் சந்தைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் கடப்பாடு எமக்குள்ளது. துரித பொருளாதார வளர்ச்சியையும் வேலை வாய்ப்புகளையும் ஊக்குவிக்கும் அதே வேளையில் அது அதன் பயன்களை நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கின்றது. தனியார் துறை முயற்சியே பொருளாதார வளர்ச்சியின் முக்கிய சாதன மாக விளங்கும். உருப்படியான சீவனோபாயங்களை உரு வாக்கிக்கொள்ளும்வரை வறியவர்களுக்கு விசேட பாதுகாப்பு அளிக்கப்படும். சந்தையைத் துரித பொருளாதார அபிவிருத்திக் கும் சமூக மேம்பாட்டுக்கும் பயன்படுத்துதல் எமது திறமுறை யாகும். "மனித நேயம் தழுவிய சுதந்திர சந்தைப் பொருளாதாரம்" என்பதன் பொருள் இதுவாகும்.

முந்திய அரசாங்கம் எந்தளவு ஆழமாக ஊழலிலும் சூறையாடுதலிலும் ஈடுபட்டு இருந்ததென்பதை உற்று நோக்குமிடத்து நாம் எதிர்நோக்கும் சவாலின் பாரிய பரிமாணம் புலனாகியது. இருப்பினும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் கொண்டுள்ள திடசங்கற்பத்தில் உறுதியாக நிற்போம்.

இதனை எமக்காகவும் எதிர்காலச் சந்ததிகளுக்காகவும் சாதிப் பதற்கு இலங்கை மக்கள் அனைவரினதும் ஆதரவும் தொடர்ந்து எமக்குத் தேவைப்படுகின்றது. மக்கள் எமக்கு அளித்துள்ள பாரிய

உரிமைக் கட்டளைக்கு செயலுருக் கொடுக்க வேண்டுமானால் அவ்வாறு செய்வதற்கு எமக்குப் போதுமான கால அவகாசம் அளிக்கப்பட வேண்டும். 17 ஆண்டுகளாக நீடித்த அரசியல் வன்முறையும் ஆட்சிச் சீர்கேடும் நாம் ஆட்சியில் அமர்ந்த 18 வாரங்களில் திருத்தப்பட முடியாது.

அண்மையில் தொடர்ச்சியாக நடைபெற்ற வேலை நிறுத்தங்களும் புறநடையான சம்பளக் கோரிக்கைகளும் இத்தருணத்தில் பொருத்தமற்றவையாகத் தோன்றுகின்றன. 17 ஆண்டுக்கால அடக்குமுறைக்குப்பின் தொழிலாளர்கள் தம் உரிமைகளை வெளிப்படுத்த வேண்டியது அவசியம் என்பதில் ஐயமில்லை. ஆனால், கோரிக்கைகளும் கைக்கொள்ளும் முறைகளும் அதி தீவிர நிலை அடையும்பொழுது தொழில் தாபனங்களை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. பொறுப்பான செயற்பாடு அவசியம் என்பதை நாம் உணர வேண்டும். இல்லையானால் எமது பொருளாதாரத் திட்டம் முழுவதும் சீர்குலைவுக்குள்ளாகும். தொழில் தகராறுகள் எமது பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கு அத்தியாவசியமான வெளிநாட்டு முதலீட்டை வெருண்டோடச் செய்கின்றது. பெரும் சங்கடங்கள், தியாகங்களுக்கூடாக மக்கள் பதவியில் அமர்த்திய அரசாங்கத்தைக் காப்பதற்கு அந்த மக்களே அணிதிரள வேண்டும். வேலைவாய்ப்பை எதிர்பார்த்து இருக்கும் இலட்சக்கணக்கானோர் உள்ளனர் என்பதை வேலையில் அமர்ந்துள்ளோர் உணர வேண்டும். பொருளாதாரத்தை இயக்கச் செய்வதற்கு எமது அரசாங்கத்துக்குக் குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் தேவை.எனவே, கூலிகள் தொடர்பில் இரண்டாண்டுத் தவணையொன்றுக்குரிய முத்தரப்பு இணக்கத்தை ஏற்படுத்துமாறு நாம் தொழிலாளர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இந்த ஏற்பாடு எமது பொருளாதாரத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் அதன் மூலம் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் கால அவகாசத்தை அளிக்கும்.

எமது கனவை நனவாக்கும் பொருட்டு சவால்களை ஏற்பதற்கும் அடிகளைத் தாங்கிக் கொள்வதற்கும் அவசியமான உளத்திண்மையும் தைரியமும் எமது அரசாங்கத்துக்கு உண்டு. அவ்வாறே இந்நாட்டு மக்களும் அந்தச் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும். அங்ஙனம் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சிரமமான அந்த அழகிய கனவை நனவாக்கப் பாடுபடுவோமாக.

சனநாயக ஆட்சி முறையொன்றின்கீழ் எமது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சமாதானமும் சுபீட்சமும் தோன்றுவதாகுக.



REFERENCE
ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

Printed at the Department of Government Printing, Sri Lanka.